# தியானக்கிரம விஷயம்

இங்கிலீஷ் பாஷையிலிருந்து

பென்ஷன் தாசில்தார் K. S. இராமசந்திர ஐயரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

---

[பூர்ணசந்திரோதயமாபீசு கிளர்க்கு

B. S. ராமசுப்பையரால் பரிசோதிக்கப்பட்டது]

---

மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் விலைக்கு வாங்கலாம்.

இதன் விலை அணா 4.

---

இது

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1916

# பூர்ணசந்திரோ

இது பிரதி ஆங்கில மாதமும் 30-ம் உ ந[illegible] மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ்ப்பத்திரிகை. நம்தேசத்தில் வடமொழி, தேசமொழிகளில் மஹான்களால் உபதேசிக்கப் பெற்றுள்ள உண்மைகளும், பிரஹ்மஞானசபையாரால் வெளிவந்துள்ள புத்தகங்களிலுள்ள உண்மைகளும் ஜனசமூகத்திற்குரிய பொதுவான தர்மங்களும் நீதி முறைகளும், சீர்திருத்தமுறைகளும் தக்க வித்வான்களைக் கொண்டு வியாஸங்கள் ரூபமாய் இப்பத்திரிகையில் வெளியிடப்பட்டு வருகின்றன. பொதுவாய் ஜனங்களுக்கு ஞானம் பரவி அபிவிருத்தியாக வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஏற்பட்டதேயன்றி பணலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற கருத்துடனன்று. பத்திராதிபரும் வியாஸம் எழுதுகின்றவர்களும் பண விருப்பமின்றி இனாமாக வேலை செய்கின்றார்கள்.

50 ரூபாய்க்குக் குறையாமல் நன்கொடை கொடுக்கிறவர்கட்குத் தங்கள் ஆயுள் காலமுழுமையும் பத்திரிகை பிரசுரமாகும் காலத்தில் மாசம் ஒரு பிரதி மறுபடி சந்தாப் பொறுப்பின்றி அனுப்பப்படும். வருஷசந்தா ரூபா 2 தான். பத்திரிகை வேண்டியோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். மானேஜர் பூர்ணசந்திரோதயம் பிரஹ்மஞானசபை, மதுரை.

---

## பிரஹ்மஞான ஸபை.

இது 1875ஹு நவம்பர் மீ 17உ நியூயார்க் நகரில் உண்டாகி 1905ஹு ஏப்ரல் மீ 3உ மதராஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இதின் நோக்கங்கள்.

1. ஜாதி, மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வஜந ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

4. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பல பிரபஞ்ச நியதிகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதகமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

மநமானது எந்தெந்தக் கடமைகளை அலைந்தலைந்து வெளியே செல்கின்றதோ, அந்தந்தக் கடமைகளிலும், மநத்தைக் கடிவாளம் போட்டு இழுத்து, ஆத்மாவின் வசப்படுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். அக்கடிவாளங்கள் தான், இப்புத்தகத்திலுள்ள நற்சிந்தனைகள் என்றறிக.

இது அடையாறு தியஸாபிகல் பப்ளிஷிங் ஹவுஸ் மானேஜரவர்களுடைய அனுமதிபெற்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இம்மொழிபெயர்ப்பில பென்ஷன் சப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் மகா-௱-௱-ஸ்ரீ T. S. லக்ஷ்மீநாராயண ஐயர் அவர்களால் தமிழில மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் "சத்குருபாதங்களில்" என்ற புஸ்தகத்தை நான் உபயோகப்படுத்தியிருக்கிறேன். அதற்காக அவர்களுக்கும், இப்புஸ்தகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தலுக்கு அனுமதி கொடுத்த மேற்கூறிய பிரஹ்மக்ஞான புஸ்தகசாலை மானேஜர் அவர்களுக்கும், என்னுடைய மொழிபெயர்ப்பைப் பரிசோதனை செய்து அச்சுக்குக் கொடுத்து அச்சுப்பிரதியையும் தயவாகப் பரிசோதித்து வைத்த பூரணசந்திரோதய மாசிகைக்கு மகா-௱-௱-ஸ்ரீ B. S. ராமசுப்பையர் அவர்களுக்கும், ஷை பத்திரிகையில் முதலில் பிரசுரம் செய்யும்படியாக அனுமதி கொடுத்து என்னை இப்படிப்பட்ட வேலையில் தைரியப்படுத்தின அதன் பத்திராதிபரான மகா-௱-௱-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயர் அவர்களுக்கும் நான் நன்றியுள்ளவனாகவிருக்கிறேன்

இதில் ஏதாவது அர்த்தப் பிழை, சொல் பிழையிருந்தால் அதைப்பற்றி தயவுசெய்து தெரிவித்தால் அடுத்த பதிப்பில் அப்பிழைகளுக்கிடமின்றி யிருப்பதற்கு ஏற்பாடு செய்யத் தயாராயிருக்கிறேன். நான் மொழிபெயர்ப்பதற்கு யத்தனித்ததில் இது முதலாவது யத்தனமாகையால் எப்படிப்பட்ட பிழைகளையும் பொறுத்தருளும்படியாக, இப்புஸ்தகத்தை வாங்குபவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

கே. எஸ். ராமசந்திர ஐயர்.

# தியானக்கிரம விஷயம்.

## ஜனவரி மாசம்.

மாசாந்தர அப்யாஸம்:-ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரன் உன்னிட மிருக்கிறார். அதனால், நீ தீவ்ரமாய் மட்டும் இச்சிப்பாயானால் உன்னால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—ஈசுவரனுடைய அன்பின் பிரவாஹம் மனிதர்களை அடைதலுக்கு, நீ ஒரு வாய்க்காலாக அமையவேண்டி, ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சி.

2-வது வாரம்:—உன் சரீரம் எதையாவது அடைய விரும்பினால், நீ அதை யதார்த்தமாக விரும்புகிறாயா என்பதைக் கவனித்துப் பார். ஏனென்றால் நீ ஈசுவராம்சமான படியால், ஈசுவரன் எதைச் சிந்திக்கிறாரோ, அதைத்தான் நீயும் சிந்திப்பாய்.

3-வது வாரம்:—நாம் விகாஸ முறைக்கு அநுகூலமாக விருக்கலாம். அல்லது தடங்கலாகவிருக்கலாம். ஈசுவர ஆக்ஞைக் குட்பட்டு நடக்கப் பாத்ரவானாகலாம். அல்லது அவரை யெதிர்க்கலாம்.

4-வது வாரம்:—ஈசுவர சைதந்யம் உன்னிட மிருப்பதுபோல், உன் அயலார்களாகிய சஹோதரர்களிடமு மிருக்கிறது. அவர்களிடமுள்ள அந்த ஈசுவர சைதந்யத்தை மலரச்செய்வதன் மூலமாகவே, அவர்களுக் குதவிசெய்து, அவர்களின் நிலைமையை உயர்த்த முயலுவாய்.

5-வது வாரம்:—ஸத், சித், ஆநந்தம் என்பவை ஸர்வேசுவரனின் மூன்று அம்சங்கள். ஈசுவரனுக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்று இச்சிப்பவர்கள், மேற்கூறிய அம்சங்களை யடைதற் கேதுவான கர்மம், பக்தி, ஞானம் என்ற மும்மார்க்கங்களையும் இவ்வுலகில் கடைப்பிடித்தல் வேண்டும்.

# தியானக்கிரம விஷயம்.

## திரஹஸரி அப்யாஸம்.

(1) ஈசுவரனுடைய அன்பின் பிரவாஹம் மனிதர்களை யடைதலுக்கு நீ ஒரு வாய்க்காலாக அமையவேண்டி, ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சி.

(2) ஈசுவரன் அன்பே யாதலால், நீ ஈசுவரனுடன் ஐக்யமாக வேண்டுவதற்கு, நீ தன்னயம் அற்றவனாகவும் அன்பு நிறைந்தவனாகவும் இருத்தல் அவசியம்.

(3) ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சித்தல் தான் ஸாதாரணமாய் அன்பென்று சொல்லப்படுகிறது. அன்பென்பது இச்சையென்று மட்டும் சொல்லுதல் அவ்வளவு பொருந்தாது. ஆனால் அதைத் திடசங்கற்பம் (உறுதியான நிர்மானம்) என்றே சொல்லலாம்.

(4) அன்பு என்பது ஈசுவரனுடன் எப்போதும் ஒருமையுணர்வைக் கொள்வதன் மூலமாய், அதாவது அநந்யபாவத்தைக் கொள்வதன் மூலமாய், ஈசுவர ஸங்கல்பத்தின்படியே நாமும் திடசங்கற்பங் கொள்ளுதலாகும். அவரிடத்துள்ள பேரன்பினால், அவர் செய்வதைப் போலவே நீயும் செய்வாய், அவரைப்போலவே நீயும் நடப்பாய்.

(5) மேன்மார்க்கத்திலுள்ள ஒருவன் ஈசுவரன் கையிலுள்ள பேனாவாகிறான். அவன் மூலமாகவே ஈசுவரனுடைய எண்ணம் வெளிப்படுகிறது.

(6) அன்பு மேலிட்டு மேன்மார்க்கத்தில் ஒழுகுகிறவனை, ஈசுவரனின் அன்பாகிய ஒளியை உலகத்தில் எப்போதும் தன் கிரணங்களால் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அக்நிஜ்வாலைக்கு உவமித்தல் பொருந்தும்.

(7) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்ற பிரகாரம் "எல்லாம் ஒன்றே" யாகையால், அவ் வொன்றாகிய ஈசுவரனின் ஸங்கல்பம் தான், ஒருவரைப்போலவே எல்லோருக்கும் நிஜமான இன்பத்தை விளைக்கக்கூடும். ஆகையால் ஈசுவர சங்கற்பத்தையே அனைவரும் நாடக்கடவர்.

(8) உன் சரீரம் எதையாவது அடைய விரும்பினால், நீ அதை யதார்த்தமாக விரும்புகிறாயா என்பதைக் கவனித்துப்பார். ஏனென்றால் நீ ஈசுவராம்சமான படியால், ஈசுவரன் எதைச் சிந்திக்கிறாரோ, அதைத்தான் நீயும் சிந்திப்பாய்.

(9) மனிதர்கள் நித்ய, அநித்ய வஸ்துக்களின் விவேகம் அடையும்வரை, ஈசுவரன் பக்ஷமுள்ள அணியைச் சேர்ந்தவர்களாகார்.

(10) உன்னுடைய நிஜ ஸ்வரூபம், ஈசுவரனாகிய மஹா தேஜஸ்ஸினின்று வெளித்தோன்றிய ஒருபொறி என்னலாம். அதாவது நீ ஈசுவரனுடைய அம்சம்.

(11) ஸர்வ பராக்ரமசாலியான ஈசன் உனக்குள்ளேயே இருக்கிறார்.

(12) அதனால், உன் இஷ்டம் தீவ்ரமாகமட்டும் இருக்கும் பக்ஷத்தில், உன்னால் செய்து முடிக்கக்கூடாத கார்யம் ஒன்றுமேயில்லை.

(13) "நான் ஒரு மனிதனேயாயினும், மநுஷ்ய ரூபமாயுள்ள ஈசுவரனே யாகையால், இக்காரியம் என்னால்செய்யக்கூடும், இதைக் கட்டாயம் செய்தே தீர்ப்பேன்," என்று உனக்குள்ளேயே சொல்லிக்கொள், அதாவது உறுதிகொள்ளு.

(14) விவேக மில்லாதவனே தன்னைப் பெரியவனாக நினைத்துக் கொள்ளுகிறான். "நான் இதைச் செய்தேன். அப்பெருங் காரியத்தைச் செய்தேன்." என்று எண்ணிக்கொள்ளுகிறான். ஞாநவானோ, அதாவது விவேகமுள்ளவனோ, ஈசுவரன் ஒருவரே பெரியவரென்றும், நற்காரியங்களனைத்தும் அவராலேயே நடை பெறுகின்றனவென்றும் அறிவான்.

(15) நாம் விகாஸமுறைக்கு அநுகூலமாக விருக்கலாம் அல்லது தடங்கலாக விருக்கலாம். ஈசுவர ஆக்ஞையை நிறைவேற்றலாம் அல்லது அவரை யெதிர்க்கலாம்.

(16) "நாம் எவ்விதம் நடந்துகொள்வது ஈசுவர ஸம்மதம்?" என்னும் அறிவே, ஸந்மார்க்க முறையை நாடுபவர் கவனிக்கவேண்டிய முதன்மையான விஷயம்.

(17) ஈசுவரன் விகாஸமுறை என்ற நியதிக் கிரமத்தின்படி நம்மை ஆளுகிறார். ஒருதடவை மனிதன் விகாஸமுறையின் விதியை நிதர்சனமாகத்தெரிந்துகொண்டால், அதை நிறைவேற்றுதற்காகத் தன்னாலானமட்டும் உழைப்பான். அவ்வழியை விட்டும் வில

கான். ஏனெனில் அவ்வழியானது அத்தகைய மஹிமை பொருந்தியது.

(18) மனிதன் எத்தருணம் நேரான ஞானோதயம் பெறுகிறானோ, அப்போது ஈசுவரனின் பக்கமே இருந்துகொண்டு, நல்ல காரியங்களைச் செய்தும், தீயகாரியங்களை விலக்கியும், விகாஸமுறைக்கு அநுகூலமாகவும், சுயநலத்துக் கல்லாமலும் உழைக்க ஆரம்பிப்பான்.

(19) ஒருவன் அவ்விதம் ஈசுவரன் பக்ஷமாகநடப்பானாகில், அவன் வெள்ளியம்பலத்தைச்சேர்ந்தவனாகிறான். அவன் ஹிந்து, பௌத்தன், கிறிஸ்தவன், அல்லது மஹம்மதியன் என்பவைகளில் எப்பெயர் பூண்டவனாயிருந்தாலும் என்ன?

(20) ஈசுவரன் பக்ஷமுள்ளவர்கள், அவர்கள் இவ்வுலகில் இருப்பது எந்த பரமார்த்த விஷயத்திற்காக என்றும், அந்நிலைமையில் அவர்களுடையகடமை என்னவென்றும் அறிந்துகொண்டு, அக்கடமையைச் சரிவர நிறைவேற்றவும் முயன்று வருகிறார்கள்.

(21) உனக்குள்ளிருக்கும் ஈசுவரனை, நீ ஆழ்ந்து உள்நோக்கிச் சென்று பார்த்து, ஈசுவரன் வாக்கைக் கேட்கவேண்டும். அது தான் நிஜமாகவே உன் வாக்கு.

(22) உன் ஸஹோதரனிடத்து குப்தமாயிருக்கும் ஈசுவராம்சத்தைப் பிரகாசப்படுத்தும் வழியைத் தெரிந்துகொள். அவனையே அவ்வீசுவராம்சத்தை எப்படி நன்குணரச் செய்யலாம் என்பதையும், தீர்க்காலோசனைசெய்து தெரிந்துகொள். இவ்விதம், உன் ஸஹோதரனைத் தவறான வழியினின்று தப்புவிக்கலாம்.

(23) ஈசுவரசைதன்யம் உன்னிடமிருப்பதுபோல், உன் அயலார்களாகிய ஸஹோதரர்களிடமு மிருக்கிறது. அவர்களிடமுள்ள அந்தஈசுவர சைதந்யத்தை மலரச்செய்வதன் மூலமாகவே அவர்களுக் குதவிசெய்து, அவர்களின் நிலைமையை உயர்த்த முயலுவாய்.

(24) மேல் பார்வையில் எவ்வளவு தீயதாகக் காணப்படினும், ஒவ்வொரு ஜீவராசியிலும், வஸ்துவிலும், ஈசுவர னிருத்தலைத் தெரிந்துகொள்ளக் கற்றுக்கொள்.

(25) முக்கியமாக அன்புக்கு விரோதமாக நடைபெறும் தீய காரியங்கள் மூன்று:—(1) வம்புபேசுதல். (2) துன்பம் செய்தல். (3) மித்யாசாரம். ஈசுவரனிடம் பேரன்பு நிறைந்த ஒருவன், தன்னை இவைகள் அணுகவொட்டாமல், இடையறாது பாது காத்துக் கொள்ள வேண்டும்.

(26) வேட்டை விளையாட்டென்று பெயர் வைத்துக் கொண்டு ஈசுவர ஸ்ருஷ்டியாகிய ஜீவஜந்துக்களைக் கொல்லுபவர்களின் கதியும் குரூரக் கொலை செய்பவர்களுடைய கதியும் ஒன்றே.

(27) எங்கும் நிறைந்துள்ள ஈசன்மேல் அன்புள்ளவனாய், சமயம் வாய்க்கும் போதெல்லாம், ஜீவகாருண்யத்தின் சிலாக்யத்தை யும், ஜீவஹிம்ஸையின் இழிவையும் தைர்யமாய் எடுத்துரைக்க வேண்டும்.

(28) கொடிய மித்யாசாரத்திற்குட் பட்டு, அன்பின் வடிவ மான ஈசுவரன் பெயரை வைத்தே அநேக பாதகங்களைப் பலர் அறியா மையாற் செய்கிறார்கள். ஆகையால் நீ மிகவும் ஜாக்ரதையாயிரு. அதின் அற்ப சின்னங்கள் கூட உன்னிடத்தில் இருக்கவேண்டாம்.

(29) ஸத், சித், ஆனந்தம் என்பவை ஸர்வேசுவரனின் மூன்று அம்சங்கள்.

(30) ஈசுவரனுக்குத் தொண்டுபுரிய வேண்டு மென்று நீ இச் சிப்பாயானால், மேற்கூறிய அம்சங்களை அடைதற்கேதுவான கர்மம் பக்தி, ஞானம் என்ற மும்மார்க்கங்களையும் இவ்வுலகில் கடைப் பிடித் தல் வேண்டும்.

(31) அன்பே ஈசுவரன் என்ற பிரகாரம், ஞானத்தின் உரு வே ஈசுவரன் என்பதும் உண்மையே. ஆகையால் எவ்வளவுக் கெவ் வளவு நீ ஞானவானாகிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு ஈசுவர ஸாந்நித் யம் உன்னிடத்தில் விளங்கும்.

## பிப்ரவரி மாசம்.

மாஸாந்தர அப்யாஸம்:—குருநாதனுடைய பரிசுத்த ஸந்நிதியில், குருநாதனைப்போலாக வேண்டுமென்ற இச்சை தவிர, மற்ற ஆசைகளெல்லாம் நாசமடைகின்றன.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—குருநாதன் எவைகளைச் செய்வார், பேசுவார், நினைப்பார் என்று நீ எண்ணுகிறாயோ, அவைகளை நீ செய்யவும், பேசவும், நினைக்கவும் வேண்டும். மற்றவைகள் விலக்கப்பட வேண்டியவைகள்.

2-வது வாரம்:—குருநாதன், அவரது சக்தியைத் தம் சிஷ்யன் மூலமாகவே மற்றவர்களுக்கனுப்பும்படியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி நேரும். சிஷ்யன் மநத்தளர்ச்சிக்கு இடங்கொடுப்பானாகில் குருநாதன் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்போதும் ஸந்தோஷமுள்ளவனாயிருத்தல் வேண்டும்.

3-வது வாரம்:—நீ உன் குருநாதனைத் தியானித்து நன்குணர்ந்தும், அவரை நிச்சய புத்தியுடன் நம்பவும் வேண்டும். ஏனெனில் இவ்விதம் முடியாவிட்டால், அவர் உனக்கு ஸஹாயம் செய்யவும் முடியாது. பூர்ண நம்பிக்கை ஏற்படாத வரையில் அவருடைய அன்பும் சக்தியும் உன்னிடம் வாரா.

4-வது வாரம்:—நீ செய்யும் வேலை யொன்றை, குருநாதன் உன்முன் தோன்றிப் பரீக்ஷிப்பாராயின் எவ்வளவு ஜாக்ரதையாய்ச் செய்வாயென்று நினைத்து, அவ்விதமே எல்லா வேலைகளையும் திருந்தச் செய்ய வேண்டும்.

எக்கருமத்தையும், அவர் நிமித்தமாக நீ செய்யவேண்டும்.

## தினசரி அப்யாஸம்.

(1) குருநாதன் எவைகளைச் செய்வார் பேசுவார் நினைப்பார் என்று நீ எண்ணுகிறாயோ, அவைகளை நீ செய்யவும், பேசவும், நினைக்கவும் வேண்டும். மற்றவைகள் விலக்கப்படவேண்டியவைகள்.

(2) குருநாதன் எனக்களித்த போதனைகளை நீங்களும் அநுஸரித்து வருவீர்களாகில் அவைகள் உங்களுக்கும் பிரயோஜநகாமாயிருக்கும்.

(3) குருநாதனுடைய உபதேசங்களைக்கேட்டல் மட்டும் போதாது. அவர்சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு குறிப்பையும் கவனமாய் கிரஹித்து, அதன்படி நீ நடக்கவேண்டும். அவைகளைக் காரியத்திற் கொள்ளவேண்டும்.

(4) சிஷ்யன் குருநாதனோடு ஒருமைப்பட்டவன். அவன் தன் எண்ணத்தை, குருநாதன் எண்ணத்தோடு சேர்த்து மாத்திரம் பார்க்கவேண்டியது. அவருடையது தன் எண்ணத்துடன் ஒருமைப் பட்டதா படாததா என்பது உடனேதெரியவரும்பொருட்டு அவ்விதம் சிஷ்யன் செய்யவேண்டும்.

(5) ஸித்திகளுக்காசைப் படாதே. உனக்கவைகள் வேண்டியது நன்மை அல்லது அவசியமென்றுகுருநாதன் அறியுங்காலத்தில் அவைகளுனக்கு வரும்.

(6) ஸத்குரு தரிசனம் நேருக்கு நேரே கிடைப்பதற்கு முந்தி, ஆசையின்மையை நீ அப்பஸித்து அடைதல் நலம். நீ அப்பஸித்தால் அடைதலும் ஸாத்தியமே.

(7) சுயநயமற்றதும், பரோபகாரமுமான எந்த வேலையும் குருநாதனுடையதே. அதை நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

(8) குருநாதன், அவரது சக்தியைத் தம் சிஷ்யனின் மூலமாகவே மற்றவர்களுக்கனுப்பும்படியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி நேரும். சிஷ்யன், மனத்தளர்ச்சிக்கு இடங்கொடுப்பானாகில், குருநாதன் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்போதும் ஸந்தோஷமுள்ளவனாயிருத்தல் வேண்டும்.

(9) உன்னை நீ குருநாதனுக்கு அர்ப்பணஞ் செய்துகொண்டகாரணத்தினாலேயே, உனது கர்மபந்தம் சீக்கிரம் முடிவு பெறவேண்டுமென்று நீ கேட்டதாகிறது. ஆகையால் நூறு ஜன்மங்களில்

தொடர்ந்து அநுபவிக்கவேண்டிய கர்மத்தை, இரண்டொரு ஜன்மங்களில் இப்போது நீ அநுபவிக்க வேண்டியதாய் நேரிடுகிறது. இந்தச் சொற்ப ஜன்மங்களை இலகுவாய்த் தள்ளிவிட, கருமபலன்கள் தீவ்ரமாய் உனக்கு நேருமாகையால், அவைகளைக் களிப்புடனும் சந்துஷ்டியுடனும் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

(10) வெளி உபத்ரவங்களாகிய விசனம், துன்பம், வியாதி, நஷ்டம் இவைபோன்ற விஷயங்களால் மனிதனுக்கு ஒரு பாதகமுமில்லை யென்று குருநாதன் உபதேசிக்கின்றார். மனச் சமாதானத்தை இவைகள் கெடுத்துவிடாமல் மாத்திரம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(11) நீ உன் கெட்ட கர்மங்களின் பலன்களை அநுபவித்துத் தீர்ந்து ஸ்வதந்த்ரனாக ஏற்படாத வரையில், குருநாதனுக்கு நீ உபயோகமுள்ளவனல்லவென்று ஞாபகத்தில் வைத்துக்கொள். உன் கர்மத்தை சந்துஷ்டியுடன் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

(12) உன் மாநஸிக சரீரம் ஸ்வப்ரயோஜனத்தையே மதித்து குருநாதன் கைங்கர்யத்தை நினைக்கவும், பிறர்க்குதவி செய்யவும் ஒட்டாமல் முயற்சிக்கின்றது.

(13) அநேகர்கள் தங்களுடைய இச்சைகளையே தாங்களென்று நினைத்திருக்கிறார்கள். தங்களிடத்திலுள்ள வெவ்வேறான இச்சைகளும் விருப்பு வெறுப்புக்களும் போய்விட்டால் தங்களுடைய இருப்பே போய்விட்டதாக எண்ணுகிறார்கள். இத்தகையர்கள் குருநாதனைத் தரிசியாதவர்கள்.

(14) குருநாதனுடைய பரிசுத்த ஸந்நிதியில் குருநாதனைப் போலாக வேண்டுமென்ற இச்சைதவிர மற்றஆசைகளெல்லாம் நாசமடைகின்றன.

(15) நீ உன் குருநாதனை எப்போதும் மநத்தில் தியானங் கொள்வதனாலேயே, அறிந்துகொண்டு, அவரைப் பூர்ணமாக நம்ப வேண்டும். இல்லையாயின், அவர் உனக்கு உதவிபுரிய முடியாது. பூர்ண நம்பிக்கை ஏற்படாதவரையில் அவருடைய கருணையும் சக்தியும் உன்னிடம் வரா.

(16) நீ உன் குருநாதனை முழுமநத்துடன் நம்பவேண்டும். உன்னையும் நீ நம்பவேண்டும்.

(17) நீ குருநாதனைப் பார்த்துவிட்டால், உனக்கு அவரிடம் திடநம்பிக்கை ஏற்பட்டு, அநேக ஜன்மங்கள் வரை நீடித்திருக்கும்.

(18) இந்த வசநங்கள் என் ஸத்குருவினால் எனக்குபதேசிக்கப்பட்டவைகள். அவரன்றி என்னால் ஒன்றும் முடிந்திராது.

(19) குருநாதனுடைய ஒரு ஸமிக்ஞை (குறிப்பு) கவனிக்கப்படாவிட்டாலும், அல்லது அவருடைய வார்த்தை யொன்றை நாம் கவனியாது தவறவிட்டாலும், அது போனதேயாம். ஏனென்றால் அவர் ஒன்றையும் இரண்டு தரம் சொல்லமாட்டார்.

(20) நீ ஸத்குருவின் சிஷ்யனாகும்போது உன்னுடைய எண்ணத்தை அவர் எண்ணத்தோடு ஒத்துப்பார்த்து, உன் எண்ணங்கள் சிலாக்கியமானவைதானா? என்று பரீக்ஷித்தறிந்து கொள்ளலாம்.

(21) குருநாதன் ஸர்வக்ஞனானதையால் அவருடைய எண்ணம் குற்றமற்றதென்றறி.

(22) குருநாதன் உடனே பார்க்க வருவாரென்பதை அறிந்தால், ஒருவேலையை நீ எப்படிச் செய்வாய் என்பதை ஆலோசி. நீ செய்யும் எல்லா வேலைகளையும் இவ்விதம் ஆலோசித்துச் செய்யவேண்டும். எல்லா வேலைகளையும் நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

(23) உலகம் நல்லதென்று புகழும் ஒரு பெருங்காரியத்தை விட, குருநாதனுடைய பிரவிர்த்திக்கு நேரே அநுகூலமாயுள்ள ஒரு சிறிய காரியம் அதிக மேன்மையானது.

(24) குருநாதனைப் பின்பற்ற விரும்புமவர்கள் எது எப்படி நேரினும், நீதிநெறி வழுவாது செல்ல ஏற்கனவே தீர்மானித்தவர்களாயிருப்பார்கள்.

(25) நீ அடையவேண்டியது எவ்வளவு பெருமை யுள்ளதாக விருப்பினும், சுயநலத்தை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்துமென்பதை நீ ஞாபகத்திற் கொள். சுயநலம் பற்றிய ஆசைபோனாலன்றி, நீ குருநாதனின் ஏவலுக்குட்பட்டு நடக்க, முழுதும் ஸ்வதந்திரனல்ல.

(26) நீ உன் முன்னிலையில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம். நீ வேறு எவ்வேலையைச் செய்ய நேர்ந்தாலும், இதை மறத்தல் தகாது. இதற்கிடையூறான எக்காரியமும் விலக்கப்படவேண்டும்.

(27) குருநாதன் எப்போது திருவாய் மலர்ந்தருளுவாரென்று காத்திருந்து, அவருடைய ஆக்ஞையை யுற்றுக் கேட்டுக் கவனத்துடனறிந்துகொள்.

(28) அவர் காட்டும் சொற்ப ஜாடையினாலே விஷயத்தையறிந்து கொள்வாய்.

(29) நீ அவருடைய இரஹஸ்யம் எவ்வளவு மெல்லியதாயினும், அதனைக் கேட்கும் செவித்திறனுள்ளவனா யிருத்தல் வேண்டும்.

## மார்ச்சு மாதம்.

மாசாந்தரஅப்யாஸம்:—"ஒரு மநுஷ்யன் முயற்சித்து ஸாதித்திருக்கிறதை, மற்றொரு மனிதனும் ஸாதிக்கலாம். நானும் ஒரு மநுஷ்யனே. ஈசுவரனும் என்னிடமிருக்கிறார். ஆகையால் இதை நான் செய்யக்கூடும், செய்தே முடிப்பேன்" என்று உனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு திடமாய் ஸங்கல்பித்துக்கொள்.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—ஜயம் பெற விரும்பும் ஒருவன், என்ன போதிக்கப் படுகிறதோ, அதை எள்ளளவேனும் தவறாமல் சரியாய் அநுஷ்டிக்கவேண்டும்.

2--வது வாரம்:—மேன் மார்க்கத்தில் செல்லுபவன் ஒருவன், ஒவ்வொரு விஷயத்தையும் தனக்குத் தானே ஆலோசித்து நிதானித்துக் கொள்ளப் பயிலவேண்டும்.

3--வது வாரம்:—நீ மேன் மார்க்கத்திலடிவைக்க வேண்டுமானால், உன் ஸங்கல்பம் துலைவைக்கப்பட்ட எஃகு போலிருக்க வேண்டும்.

4--வது வாரம்:—மேன்மார்க்கத்திலேறிய மனிதன் ஜீவிப்பது தனக்காகவல்ல, பிறருக்காக; அவன் தன்னை மறந்தவனாகி, பிறருக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே முயற்சிக்கிறான்.

5-வது வாரம்:—நீ அம்மார்க்கத்தையே முற்றும் அநுஸரித்து அம்மார்க்கத்துடனேயே ஒருமைப் படுதல் வேண்டும். அதில் ஸம்சயத்துடன் இங்குமங்கும் திரும்பாமல், நேரே அதில் செல்வது உன்னுடைய ஸ்வபாவமாகவே ஏற்படுதல் வேண்டும். உனக்கு அது ஸாதாரணமான வழக்கமாகவே ஏற்படவேண்டும்.

## தினசரி அப்யாஸம்.

(1) ஜயம்பெற விரும்பும் ஒருவன் என்ன போதிக்கப்படுகிறதோ, அதை எள்ளளவேனும் தவறாமல் சரியாய் அநுஷ்டிக்க வேண்டும்.

(2) அவருடைய உதவியால் நான் மேன்மார்க்கத்தில் பிரவேசித்திருக்கிறேன்.

(3) இம் மேன் மார்க்கத்திற்குரிய ஸாதனங்கள் நான்காவன:-

பகுத்தறிவு—விவேகம்

ஆசையின்மை—வைராக்யம்.

நல்லொழுக்கம்—இந்திரிய நிக்ரஹம்.

அன்பு—பிரேமை.

(4) நீ பிறர்க்குதவி செய்ய, உனக்குச் சக்தியைக் கொடுக்கும் ஞானமும், ஞானத்திற்கு வழிகாட்டும் தீவ்ரமான மனோசங்கற்பமும் அதை உத்ஸாஹப்படுத்தும் அன்பும் ஆகிய இவைதான் உன் லக்ஷ்யங்கள். அதாவது நீ பெறவேண்டிய குணங்கள்.

(5) அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல் இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒரு முறை.

(6) "என்னால் இக்காரியம் செய்யக்கூடும், நான் செய்வேன்" என்று உனக்குள் சொல்லிக்கொள்.

(7) குருநாதனின் போதனையைச் சரியாய்க் கிரஹித்து அவரைப்போலவே அநுஷ்டிக்கக்கூடுமாகில், இதை வாசிப்போருக்கும், இதை எழுதியவருக்கு லபித்ததுபோல் அப்பெரிய மார்க்கத்தின் கதவு சுழன்று திறக்கும். அப்பொழுது இதைப் படிப்பவரும் அடி வைக்கலாம்.

(8) மேன்மார்க்கத்தில் செல்பவனொருவன் ஒவ்வொரு விஷயத்தையும் தனக்குத் தானே ஆலோசித்து நிதானித்துக்கொள்ளப் பயிலவேண்டும்.

(9) இது நித்திய வஸ்து, இது அநித்ய வஸ்து என்று பகுத்தறியும் விவேகம் மனிதர்களை மேன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்கிறது.

(10) இந்த விவேகமானது நம்முடைய அநுஷ்டானத்திற்கு வரவேண்டும். இம்மார்க்கப் பிரவேச முதல் முடிவு வரை, ஒவ்வொரு நாளும் அதன் ஒவ்வொரு படியிலும், இவ்விவேகம் நம்மநத்திலிருந்து நம்முடைய ஒழுக்கத்தைச் சீர்படுத்தவேண்டும்.

(11) சாசுவதமும், ஸத்யமும், பெறுதற் கரியனவுமான விஷயங்கள் அம்மார்க்கத்தில் மாத்திரந்தான் அடையக் கூடியவைகளென்று நீ அறிந்திருக்கின்றமையால், அதில் நீ பிரவேசிக்கின்றாய்.

(12) நீ எவ்வளவு ஞானவானாயினும் இம்மேன் மார்க்கத்தில், நீ அறியவேண்டியது அதிகமிருக்கின்றது.

(13) "ஒரு மனிதன் முயற்சித்து ஸாதித்திருக்கிறதை மற்றொரு மனிதனும் ஸாதிக்கலாம்."

(14) உனக்கு மேன் மார்க்கத்தில் பிரவேசிக்க இஷ்டமிருந்தால், நீ செய்யும் காரியங்கள் என்ன பலன்களை விளைக்குமென்று நீ ஆலோசிக்கவேண்டும். இல்லாவிடில், யோசியாமல் நீ கொடும் பாதகங்களுக்கு உட்பட வேண்டிவரும்.

## மார்ச்சு மாசம்.

(15) நீ மேன்மார்க்கத்தி லடிவைக்க வேண்டுமானால் உன் ஸங்கல்பம் துவைக்கப்பட்ட எஃகு போலிருக்க வேண்டும்.

(16) "நான் ஒரு மநுஷ்யன். ஈசுவரனும் என்னிடமிருக்கிறார்." என்று உனக்குள்ளே சொல்லிக் கொள்.

(17) சித்த ஐகாக்ரியம் (ஏகாக்ரத்தன்மை) என்ன வெனில், நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து உன்னை ஒரு நிமிஷங் கூட வேறெவ்விஷயமும் திருப்ப இயலா திருத்தல் வேண்டும்.

(18) எவ்வித மயக்கப் பொருள்களும், உலக சுகங்களும், உலக அபிமானங்களும், உன்னை ஒரு வேளையிலும் இழுக்கக் கூடா.

(19) உன் மநத்தினின்று சர்வத்தை நீக்கு. ஏனெனில் கர்வம் அறிவீனத்தினின்றே வருகின்றது.

(20) உன் விவேகத்தையும் அநுபவஞானத்தையும் உபயோகித்து உன் வாழ் நாட்களை ஒழுங்காக்கிக்கொள்.

(21) (இம்மார்க்கத்தில்) நீ எப்போதும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். நீ இல்லாவிட்டால் தவறி விடுவாய்.

(22) நிவிர்த்தி மார்க்கத்திலுள்ளவன் 'தனக்கென வாழான், பிறவுயிரோம்புவன்'.

(23) அவன் பிறர்க்குபகரிப்பதில் தன்னை மறந்தவனாகவிருப்பான்.

(24) இவன் ஈசுவரன்கையில் ஒரு இலேகினி போலாகிறான்; அதன் வழியாய் அவரது கருத்துப் பிரவேசித்து, இக் கீழுலகில் வெளியாகின்றது; அக்கருத்து ஒரு இலேகிணியின்றி வெளிப்பட முடியாது.

(25) தன் ஹிருதயத்தில் நிரம்பி நிற்கும், ஈசுவரவாத்ஸல்யம், உலகெங்கும் பிரவேசித்துப் பிரகாசிக்க, அவன் ஒரு ஜீவித அக்கினிஜ்வாலை போலும் இருக்கிறான்.

(26) நீ மேன்மார்க்கத்திற்கு ஆயத்தப்பட முயலுகையில் உனது சரீரம் கூர்ந்த உணர்ச்சி யுடையதாக வேண்டியது அவசிய மாகிறது. ஆகையால் ஒரு சப்தம், ஒரு அதிர்ச்சி உண்டானாலும் அதன் நாடிகள் எளிதில் சலனப்பட்டுக் கலங்கும், என்றாலும், கூடியவரை முயன்று நீ சரிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

(27) சாந்தமடைந்த மநது என்றால் மநத்தைரியம் என்றும் அர்த்தம், ஆகையால் மேன்மார்க்கத்தில் நேரிடும் கஷ்ட நிஷ்டூரங்களை நீ அச்ச மின்றி யெதிர்ககலாம். அதற்கு மனவுறுதி யென்றும் இன்னொரு அர்த்தம்.

(28) முற்றிலும் சுசியாயும், ஆரோக்கியமாயும் சரீர மிருந் தால்தான், மேன்மார்க்கத்துக் குரிய கஷ்ட நிஷ்டூரங்களுக் கிணங்க நடந்து, அதன் அதிப்பிரயாசத்தை அதற்கு சகிக்க முடியும்.

(29) நீ அம்மார்க்கத்துடன் ஒருமைப் படவேண்டும். அதா வது அம்மார்க்கத்தை யநுசரிக்க வேண்டிய முறையென்ன என்றும் ஆலோசிப்பதற்குக் கூட அவசிய மேற்படாதபடி, அவ்வளவு மட்டில் அம்மார்க்கத்தைக் கொஞ்சமேனும் வழிபிசகாமல் அநுஸ ரிப்பது உன் ஸ்வபாவமாகவே ஏற்பட வேண்டும்.

(30) அப்படி ஆக ஆத்மாவாகிய நீ தீர்மானித்து விட்டாய். அதிலிருந்து தப்பிப்போவ தென்றால், உன்னிட மிருந்தே நீ தப்பிப் போகிறதாகின்றது.

(31) நீ எப்பொழுதும் சாந்த முள்ளவனாக விருக்க வேண்டும்.

## ஏப்ரல் மாதம்.

**மாசாந்தர அப்பியாசம்:—** மேல்பார்வையில் நமக்கு எவ்வளவு நாஷம் தோன்றினாலும், ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வஸ்து விடமும் இயங்கும் ஈசுவர சைதந்யத்தை யறிந்து கொள்ளக் கற்றுக்கொள்.

## வார அப்பியாசம்.

**1-வது வாரம்:—** ஸர்வமும் ஒன்றாகையால், ஏகவஸ்துவாகிய ஈசுவரனது சங்கல்பப் பிரகாரம் நடப்பதே எவர்க்கும் சுகமானது.

2-வது வாரம்:—சத்தியமின்னது அசத்தியமின்னதுஎன்பதை நீ தெரிந்துகொள்; மனோவாக்குக் காயங்களில் எப்பொழுதும் சத்தியவானாயிருக்கக் கற்றுக்கொள்.

3-வது வாரம்:— அநித்தியத்தினின்று நித்தியத்திற்கு வழி காட்டும். அந்தகாரத்தி னின்று பிரகாசத்துக்கு வழிநடத்தும். மரணத்தினின்று தப்புவித்து அமிருதத்துவத்திற்குக்கொண்டுசேர்ப்பியும்.

4-வது வாரம்:— உன் ஸ்தூல, சூக்ஷ்ம காரண சரீரங்களை, நீ என்று எண்ணுதே.

அவைகள் ஒவ்வொன்றும் தத்தம் இச்சையை அடைய, தான் ஆத்மா, தான் ஆத்மா என்று மயக்கும்.

ஆனால்அவைகளின் தன்மையை அறிந்து நீ அவைகளின் யஜமானன் என்று நிச்சயங்கொள்.

5-வது வாரம்—உபயோகமிது, உபயோகமற்றதிது என்று நீ அறிந்துகொண்டால் மட்டும் போதாது; உபயோகமுள்ளவைகளிலேயே தாரதம்மியத்தையும் (அதாவது எது அற்ப உபயோகமுள்ளது எதுமிகுந்த உபயோகமுள்ளது என்று) நீயறியவேண்டும்.

ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை பொருந்திய நல்ல உபகாரச்செயல். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்களை விருத்திக்குக் கொண்டுவருவது மிக்க உபயோகமுள்ள மேலான காரியம்.

பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உணவளிக்கக்கூடும்; ஆனால் ஞான முள்ளவர்கள்தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

நீ அறிவைப் பெற்ருல், மற்றவர்களும் அதைப்பெற நீ உதவி செய்வது உனது கடமை.

## தினசரி அப்பியாசம்.

(1) ஸர்வமும் ஒன்ருகையால், ஏகவஸ்துவாகிய ஈசுவரனது ஸங்கல்பப் பிரகாரம் நடப்பதே எவர்க்கும் சுகமானது.

(2) நித்திய அநித்திய வஸ்து விவேகத்தை மார்க்கப் பிரவேச முதல் அதன் முடிவுவரையில், ஒவ்வொருநாளும் அதன் ஒவ்வொரு படியிலும் அநுபவத்தில் கொண்டுவர வேண்டும்.

(3) அறிவில்லாதவர்கள், ஐசுவரியத்தையும் அதிகாரத்தையும் அடைய முயலுகிறார்கள். இவைகள் எவ்வளவு நீடித்திருந்தாலும், ஒரு ஜன்மத்திற்கு மேற்பட்டிருக்கக் கூடியவைகளல்ல. இவைகள் அநித்தியம், இவைகளைவிட விசேஷித்தவைகள் வேறுஇருக்கின்றன. அவைகள், சாசுவதமும் ஸத்யமுமானவைகள். அவைகளை ஒரு முறை பார்த்துவிட்டால், இவைகளை நீ ஒரு பொழுதும் இச்சிக்க மாட்டாய்.

(4) இவ்வுலகிலுள்ள ஜனங்கள் யாவரும் 'அறிவினர்' 'அறிவிலார்' என இருவகைப்படுவர். இதை அறிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

(5) ஒரு மனிதனது ஜாதியும் மதமும் முக்கியமல்ல; உண்மையில் முக்கியமானது ஈசுவரன் மனிதர்களுக்கு வகுத்திருக்கும் சட்டத்தை அல்லது நியதியை அவன் எம்மட்டு அறிந்து கொண்டிருக்கிறான் என்பதே.

(6) ஜகத்பரிபாக மார்க்கம் அல்லது உலகவிகாஸ முறைவரையப்பட்டிருக்கும் படத்தை ஒரு மனிதன் ஒரு முறை நேரில்பார்த்து உள்ளபடி அதைத் தெரிந்துகொண்டால், அது மிகவும் சிறப்புற்று மகிமை தங்கி நிற்பதால், அவன் அதற்கிணங்க நடவாமலும், அதனுடன் ஒருமைப்படாமலும் இருக்கமுடியாது.

(7) ஒவ்வொருவனிடத்தும், ஒவ்வொரு வஸ்துவிலும் ஈசுவர விளக்கத்தையறிய நீ கற்றுக்கொள்! எவ்வளவு தோஷமுள்ளதாய் அவை வெளிப் பார்வைக்குப் புலப்பட்டாலும் பாதகமில்லை. ஈசுவரசைதன்னியம் உன்னிடத்தும் உன் சகோதரனிடத்தும்பொதுவாயிருப்பதால் அதன்வழியே அவனுக்கு நீ உதவலாம்.

(8) சத்தியமின்னது அசத்தியமின்னது என்பதை நீ தெரிந்துகொள்; மனோவாக்குக் காயங்களில் எப்பொழுதும் நீ சுத்தமாயிருக்கக் கற்றுக்கொள்.

(9) ஒரு எண்ணத்தை அநேகம்பேர்கள் ஏகோபிதமாய்க்கொண்டிருந்தாலும் சரி, வெகுகாலமாய் அது நம்பப்பட்டிருந்தாலும் சரி. ஜனங்களால் உத்கிருஷ்டமென்று நினைக்கப்பட்ட புஸ்தகங்களில் அது எழுதப்பட்டிருந்தாலும் சரி இக்காரணங்களால் அதை நீ அங்கீகரிக்கவேண்டியதில்லை. அதை நீயே ஆலோசித்துப்பார்த்து நியாயமானது தானாவென்று நீயே தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

10. மேன் மார்க்கத்தில் செல்ல இச்சிப்பவன், ஒவ்வொரு காரியத்தையும் தனக்குத்தானே ஆலோசித்து நிதானிக்கப் பயிலவேண்டும்; ஏனென்றால், இவ்வுலகத்திலுள்ள பெருங் கெடுதிகளிலும், பந்தங்களிலும் மித்தியாசாரமொன்று மிகக் கொடியது. அதினின்று உன்னை நீ முழுதும் விடுவித்துக் கொள்ளவேண்டும்.

11. மற்றவர்களைப் பற்றி உன் அபிப்பிராயம் உண்மையானதாக விருக்கவேண்டும். அவர்கள் விஷயமாய் உனக்குத் தெரியாத சங்கதிகளில் நீ அபிப்பிராயங் கொள்ளக் கூடாது. அவர்களெப்பொழுதும் உன்னைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பதாக நீ சங்கியாதே.

12. யாரேனு மொருவன் உன்னிடத்தில் கோபமாய் பேசினால் "எனக்கு அவன் விரோதி, எனக்குக் கெடுதி செய்ய விரும்புகிறான்" என்று நினையாதே. அநேகமாய் வேறு யாராவதொருவன், அல்லது வேறு ஏதாவது ஒரு விஷயம் அவனைக் கோபமூட்டியிருக்கலாம். நீ அவனுக் கெதிர்ப்பட்ட காரணத்தினால் அக்கோபத்தை உன்னிடம் அவன் காட்டலாம். அவனுடைய செய்கை மூடத்தனம்.கோபம் எப்பொழுதும் மூடத்தனம் தானே; ஆகையினால் அவனைப் பற்றி நீ அசத்தியமாய் நினைக்கவேண்டாம்.

13. சிஷ்யன் குருநாதனோடு ஒருமைப்பட்டவன்; அவன் தனதெண்ணத்தை குருநாதனெண்ணத்தோடு,சேர்த்து மாத்திரம் பார்க்கவேண்டியது, அது ஒரு மைப்பட்டதா படாததா என்பது உடனே தெரியும். ஒரு மைப்படாவிடில், அவ்வெண்ணம் தப்பெண்ணம். அவன் அதை உடனே மாற்றிக் கொள்கிறான். ஏனெனில் சர்வக்ஞதையால் அவரது எண்ணம் குற்றமற்றது.

14. அடிக்கடி உன எண்ணங்களை நிதானித்துப் பார். "குருநாதன் இதைக் குறித்து என்ன நினைப்பார், இவ்வித சந்தர்ப்பங்களில் அவர் என்ன சொல்வார், செய்வர் என்று விதமாயாலோசிக்க வேண்டும். எதை குருநாதன் செய்யமாட்டார், சொல்லமாட்டார், நினைக்கமாட்டார் என்று நீ நினைக்கிறாயோ, அதை நீ எப்பொழுதும் செய்யவுங் கூடாது, சொல்லவுங் கூடாது, நினைக்கவுங் கூடாது.

15. அநித்தியத்திலின்று நித்தியத்திற்கு வழி காட்டும்.

அந்தகாரத்தினின்று பிரகாசத்துக்கு வழி நடத்தும்.

மரணத்தினின்று தப்புவித்து அமிருதத்துவத்திற்குக் கொண்டு சேர்ப்பியும்.

16. இவ்விரண்டையும் (நித்யத்தையும் அநித்யத்தையும்) பகுத்தறியும் வரை, ஈசுவரன் வழியே நிற்காதவர்களாகிறார்கள். ஆகையால் மேற் சொல்லிய பகுத்தறிவே முதற்படி.

17. இது நீதி, இது அநீதி யென்றறிவது பிரயாசமில்லை. ஏனெனில் குருநாதனைப் பின்பற்ற விரும்புமவர்கள், அது எப்படி நேரிட்டாலும் நீதி வழியே செல்ல முன்னமேயே தீர்மானித்தவர்களாவார்கள்.

18. குப்த வித்தையில் நீதிக்கும் அநீதிக்கும் மத்தியில் யாதொரு படியும் ஏற்படவில்லை. நீதி எதுவோ அது உன்னால் எவ்வகையிலும் செய்யப்படவேண்டும். அநீதி எதுவோ, அது உன்னால் எவ்வகையிலும் தவிர்க்கப்படவேண்டும். இவ்விஷயத்தில் அறியாதவர்கள் என்ன நினைப்பினும், என்ன சொல்லினும், அவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத் தக்கதில்லை.

19. முக்யமிது, அமுக்யமிது, என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அநீதியை ஒழித்து நீதி தவறாது நடப்பதில் நீ மலைபோல் உறுதியாய் நில். எப்போதும் அற்ப விஷயங்களில் நீ இதரர்களுக்கு இணங்கியே நட.

20. ஈசுவர நியதியின் குப்தமான விதிகளை நீ ஆழ்ந்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டும். நீ அவைகளை யறிந்துகொண்டு, அவைகளுக் கேற்ப உனது வாழ்நாட்களை, உனது விவேகத்தையும் அநுபவ ஞானத்தையும் கொண்டு ஒழுங்காக்கிக் கொள்ள வேண்டும்.

21. ஈசுவர சைதந்யம் உன்னிடத்தும் உன் சகோதரனிடத்தும் பொதுவாயிருப்பதால், அதனை யறிந்தே அவனுக்கு, நீ உதவிட, அச்சைதந்யத்தை அவனிடத்து மலரச் செய்வதன் மூலமாய், அவனுக்குதவி அவனைக் குற்றத்தினின்று விடுவிப்பாய்.

22. உனது சரீரங்களையே நீ (ஆத்மா) என்று தவறி எண்ணாதே. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் நீ அல்ல. அவைகளில் ஒவ்வொன்றும் தனக்கு வேண்டியதைப் பெறுதற் பொருட்டே, நீ (ஆத்மா) என நடிக்கும். ஆனால் நீ அவைகளல்லவென்று அறிய வேண்டும். நீ அவைகளின் யஜமானன்.

23. உன் சரீரம் ஒன்றை விரும்புகையில் உனக்கு அது யதார்த்தமாய்த் தேவையா என்று நின்று நிதானி. ஏனெனில் நீ ஈசுவரனே. ஈசுவர ஸங்கல்பம் போலவேதான் நீயும் இச்சிப்பாயென்றால், உனக்குள்ளிருக்கும் ஈசுவரனை நீ அறிய, உனக்குள்ளேயே அந்தர் முகப்பட்டு, அவரது சப்தத்தை உற்றுக் கேள். அது உனது தொனியே தான்.

24. உன் காமசரீரம் அதற்குரிய ஆசைகளுடன் கூடியது. உன்னைக்கோபங்கொள்ளும்படியாகவும்,கொடிய வசனங்களைப் பேசும்படியாகவும், பணத்தில் பேராசை கொள்ளும்படியாகவும, பிறர் பொருளைக் கண்டு அசூயை அடையுமபடியாகவும் நீ மநக்கிலேசத்திற்குட்படும்படியாகவும் அது விரும்பும். இவை போன்ற அநேகங்கள் அதற்குத் தேவை. இவைகள் ஒன்றும் உனக்கு அவசியமில்லை. இவ்விதம் உனக்கு அவசியங்களின்னவை, உனது சரீரத்தின் அவசியங்களின்னவையென்று நீ பகுத்தறிய வேண்டும்

25. இம்மேன் மார்க்கத்தில் நீ அறிய வேண்டியது அதிகமிருக்கிறது. இதிலும் உனக்குப் பகுத்தறிவு வேண்டும். அறிந்து கொள்ளத் தகுதியானது இன்னதென்று நீ ஆழ்ந்து நிதானிக்க வேண்டும். எல்லா அறிவும் பிரயோஜனகரம் தான். காலாந்தரத்தில ஸர்வ ஞானமும் உனககேற்படும் என்றாலும், நீ சொற்ப ஞானமுள்ளவனாகவிருக்கும் வரை, எவ்வறிவினால் அதிக உபயோகமுள்ள விதமாகப் பிறர்க்குதவி செய்யலாம் என்றறிந்து, அதைக் கற்க ஆரம்பித்தல் வேண்டும்.

26. செய்கையில் உண்மையாயிரு. வேஷம் போடாதே.

27. சுயநயம், பரோபகாரம் இவைகளையும் நீ திட்டமாய்ப் பகுத்தறிய வேண்டும். சுயநயம் பல ரூபங்களை உடையது. அது ஒரு ரூபத்தோடு தோன்றும் போது, நீ, அதைக் கொன்றுவிட்டு, அது முற்ற ஒழிந்தது என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே, இன்னொரு ரூபத்தோடு முன் பலத்துடனேயே கிளம்பி நிற்கும்,

28. நிராதாரமாகவும், விவரமின்றியும், ஒன்றிருக்கப் பத்தாகவும் நீ ஒருபோதும் பேசாதே. பிறர் செய்கைகளுக்கு நீயாகக் காரணங்கள் கல்பிக்காதே. எவரைப் பற்றியாவது கெட்ட கதை யாரிடமிருந்து நீ கேள்விப்பட்டாலும், நீ அதை மறுபடியும் உன் வாக்கினால் சொல்லிப் பறை சாட்டாதே. எவ்விதத்தவறும் ஏற்படா வண்ணம் நிதானித்து ஆலோசனையுடனே பேசு.

29. உபயோகமிது, உபயோகமற்றதிது என்று நீ அறிந்து கொண்டால் மட்டும் போதாது. உபயோகமுள்ளவைகளிலேயே தாரதம்யத்தையும் (அதாவது எது அற்ப உபயோகமுள்ளது, எது மிகுந்த உபயோகமுள்ளது என்று) நீ அறிய வேண்டும்.

ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை பொருந்திய நல்ல உபகாரச் செயல். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்களை விருத்திக்குக் கொண்டு வருவது மிக்க உபயோகமுள்ள மேலான காரியம்.

பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உணவளிக்கக் கூடும். ஆனால் ஞானமுள்ளவர்கள் தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

30. எக்காரியத்தைச் செய்தல் சிரேஷ்டமா என்பதைத் தெரிந்து கொள்ள முயலுவாய். நீ கவனிக்க வேண்டியது, காரியம் பெரிது, சிறியது என்பதல்ல. நீ கவனிக்க வேண்டியது, உலகம் நல்லதென்று புகழும் ஒரு பெருங் காரியத்தைவிட குருநாதனது பிரசித்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறு காரியம் மிகவும் மேன்மை என்பதேயாம்.

## மேமாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—உனக்கு சொந்தம் என்ற பாவனையை நீ ஒழித்துவிடவேண்டும்; நீ அதிகமாக விரும்பும் வஸ்துக்களையும், நீ மிகவும் அருமையாக நேசிக்கும் ஜனங்களையுங்கூட கர்மவிதி உன்னைவிட்டு நீக்கி விடலாம், அப்பொழுதுங்கூட நீ சந்துஷ்டனையிருத்தல் வேண்டும். எந்தவஸ்துவையும், விடுவதற்குச் சித்தமாயிரு.

### வாரஅப்பியாசம்

1வது வாரம்:—நேரே ஸத்குரு தரிசன பாக்கியம் கிடைப்பதற்கு முந்தியே, நீ அப்யாஸத்தால் ஆசையின்மையை அடையலாம்

2வது வாரம்:—அடையும் பொருள் எவ்வளவு பெருமையுள்ளதாக விருக்கினும், ஸ்வயநன்மையை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்துமென்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள். இது போனாலன்றி நீ குருநாதனேவலுக்குட்பட்டு நடக்க முழுதும் சுதந்திரனல்லன்.

3வது வாரம்;—பலனைப் பார்க்க வேண்டுமென்ற உத்தேசத்தினபேரில் வேலையைச் செய்யாதே. ஒரு வேலையைச் செய்தால் அதின் பலன் தன்படியே உண்டாகும். வேலையைச் செய்வது, வேலையை உத்தேசித்தே தவிர பலனை உத்தேசித்தல்ல.(இவ்விடத்தில் கீதை 2-ம் அத். 47-வது சுலோகம் கவனிக்கத்தக்கது.)

3வது வாரம்:-சமர்த்தனெனக் காட்டிக்கொள்ளவேண்டுமென்றாவது உலகத்தார் மெச்சப் பிரகாசிக்க வேண்டுமென்றாவது இச்சிக்காதே. பேச ஆசைப்படாதே.

4வது வாரம்:—இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன? என்ன சொன்னாலென்ன? எவ்வித அபிப்பிராய

முள்ளவனானாலென்ன? இவைகள் உன்னுடைய காரியங்களல்ல. அவைகளில் ஒரு விதத்திலும் சம்பந்தப்படாமல் நீ இருக்கப் பயிலவேண்டும்.

பத்து வாரம்:—ஸித்திகளுக் காசைப்படாதே; உனக்கவைகள் வேண்டியது நன்மையென்று குருநாதன் அறியுங்காலத்தில் அவைகளுனக்கு வரும்.

## தினசரி அப்பியாசம்.

1. மேலே ஸத்குரு தரிசன பாக்கியம் கிடைப்பதற்கு முந்தியே நீ அப்யாஸத்தால், ஆசையின்மையை அடையலாம்.

2. அநேகருக்கு ஆசையின்மையென்ற சாதனம் கஷ்டமுள்ளதாயிருக்கின்றது; ஏனெனில், தங்களுடைய இச்சைகளையே அவர்கள் தாங்கள் என்று நினைத்திருக்கின்றார்கள். தங்களிடத்திலுள்ள வேறு, வேறான இச்சைகளும், விருப்பு வெறுப்புக்களும் போய்விடாமல், தங்களுடைய (ஆத்மாவின்) இருப்பே போய்விட்டதாக எண்ணுகின்றார்கள்.

3. இவ்விதமுள்ளவர்கள் குருநாதனைத் தரிசியாதவர்கள், அவர் சந்நிதானத்தின் பரிசுத்தவொளியில், அவரைப்போலாக வேண்டுமென்ற இச்சை ஒன்று தவிர மற்றெல்லா இச்சைகளும் நசிக்கின்றன.

4. பலர் இச்சிக்கும் திரவியம், அதிகாரம் முதலிய வஸ்துககள் அடையத்தக்கன வல்லவென்பது முந்தியே நீ பகுத்தறிவினால் (நித்யாநித்யவஸ்து விவேகத்தால்) தெரிந்துகொண்ட விஷயம், இதை வாக்கினால் சொல்வதுமட்டும் போதாது. யதார்த்தமாய் மனத்திலுணரவேண்டும். அப்பொழுது அவைகளிடமுள்ள எல்லா இச்சைகளுமே போய்விடும்.

5. சிலர் ஸ்வர்க்காநுபவத்தையடைய விரும்பியாவது, அல்லது, பந்த நிவிர்த்தியைத் தாங்கள் மாத்திரமேபெற இஷ்டப்பட்டாவது, இவ்வுலக வியாபாரங்களை விடுகிறார்கள். இத்தவறுதலுக்கு நீ உட்படவேண்டாம்.

6. நீ முற்றிலும் தன்னை மறந்திருந்தால்; எப்பொழுது பந்த நிவர்த்தியாகும்; எவ்வித சுவர்க்கம் கிடைக்குமென்பதை எப்படி நீ ஆலோசித்துக் கொண்டிருக்கக்கூடும்?

7. நீ அதிகமாய் விரும்பும் வஸ்துக்களையும், நீ மிகவும் அருமையாய் நேசிக்கும் ஜனங்களையும் கூட கர்மவிதி உன்னை விட்டு ஒரு வேளை நீக்கிவிடும். அப்பொழுதுங்கூட நீ சந்துஷ்டனாயிரு. எந்த வஸ்துவையும் எவ்வித வஸ்துவையும், விடுவதற்குச் சித்தமாயிரு.

8. அடையும் பொருள் எவ்வளவு பெருமையுள்ளதாக விருப்பினும், ஸ்வய நன்மையை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்து மென்பதை நீ ஞாபகத்தில் வை. இது போனாலன்றி நீ குருநாதனேவலுக்குட்பட்டு நடக்க முழுதும் சுதந்திரனல்ல.

9. சுய நன்மையை நாடிய இச்சைகளெல்லாம் போனாலுங்கூட உனது பிரவர்த்தியின் பலனைப் பார்க்க நீ யிச்சிப்பாய். அதுவும் தகாது.

10. யாருக்காவது நீ உதவி செய்தால் அவ்வுதவி எவ்வளவு பயன் பெற்றது என்றறிய நீ விரும்பாதே. அதை அவனுமறிய வேண்டும் என்றும் உன்னிடத்தில் அவன் நன்றி செலுத்தவும் வேண்டும் என்றும் நீ இச்சிக்கலாகாது.

(11) உதவி செய்ய வேண்டுமென்று கருதி முயற்சிப்பாயாகில் நீ அறிந்தாலும் அறியாவிட்டாலும் அதற்குப் பலன் ஏற்பட்டே தீரும், ஈசுவர நியதி இவ்விதமே யென்று நீ அறி.

(12) ஆகையால், நியாயத்தை யுத்தேசித்தே நீ நியாயமாய் நடக்க வேண்டும். அதினால் வரும் வெகுமானத்தை உத்தேசித்தல்ல; நீ வேலை செய்ய வேண்டியது வேலையை உத்தேசித்தே யல்லாது, அதன் பலனைப் பார்க்கவுத்தேசித்தல்ல: உலகத்திலிடத்தில் உனக்கு அன்பிருக்குங் காரணத்தால், உன்னை நீ அதற்கே அர்ப்பணம் செய்து கொண்டு உலக உபகார கைங்கர்யங்களில் நீ முயலவேண்டும்

(13) பரோபகாரத்தில் தீவ்ரமான அவா நிறைந்தவனாய் உன்னை சுற்றியிருக்கும் மனிதர்கள் மாத்திரம் அல்லாது, புல்பூண்டு மிருகம் முதலிய ஜீவ ஜந்துக்களெல்லாவற்றிற்கும் சமயம் பார்த்திருந்து, நீ உதவி செய்துவர வேண்டும். இவ்வுதவி ஒவ்வொரு நாளும் சிறிய விஷயங்களிலேயே ஏற்பட வேண்டும். அதனால பரோபகார வழக்கம் ஏற்பட்டு அபூர்வமாய்ப் பெரிய காரியம் சம்பவிக்கும் பொழுது, நீ அதை விட்டு விடாது அங்கீகரிக்க இயலுவாய்.

(14) ஏனெனில் நீ ஈசுவரனோடு ஐக்கியப்பட விரும்புவது, உனது ஸ்வப்பிரயோஜனத்துக்காக அல்ல. உன் மூலமாய் ஈசுவராநுக்கிரஹ அன்பு, மற்ற உன் உடனொத்த மனிதர்களுக்கும், பெருகும்படி நீ ஒரு வாய்க்காலாக ஏற்படவேண்டும் என்பதற்கே

(15) சமர்த்தனைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்றாவது உலகத்தார் மெச்சப் பிரகாசிக்க வேண்டுமென்றாவது இச்சிக்காதே. பேச ஆசைப்படாதே.

(16) சொற்பப் பேச்சுடனிருப்பது நலம். நீ பேச விரும்புவது சத்தியமாயும், பிரியமாயும், ஹிதமாயு மிருக்குமென்று முற்றிலும் நிச்சயமா யிருந்தாலொழிய, மௌனமே நல்லது. நீ பேசப்போவதில், இம்மூன்று நிபந்தனைகளும் இருக்கின்றனவாவென்று நீ பேசுமுன் நன்றாயாலோசித்துப்பார். இவைகளில்லாவிடில் நீ அதைப் பேசாதே.

(17) இதுமுதலே நீ பேசும்போது ஜாக்கிரதையுடன் ஆலோசித்துப் பேசும் வழக்கத்தில் நீ ஏற்படுவது நல்லது; ஏனெனில் தத்துவோபதேச தீக்ஷை பெறவரும் சமயம் உனது வார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்க வேண்டிவரும். இல்லாவிடில் சொல்லக்கூடாததை நீ சொல்லிவிடக்கூடும்.

(18) சாதாரணப் பேச்சில் அதிக காலங்கழிப்பது அநாவசியம், அது மூடத்தனமுமாம். அது வம்புப்பேச்சாய்விட்டால் பாபகரமாகிறது.

(19) ஆகையால், நீ பேசுவதைவிடக் கேட்டுப்பழகு. நேரே விரும்பினாலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே.

(20) அறிதல், துணிதல், (ஸங்கல்பித்தல்) தொடங்குதல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒரு முறை. இந்நான்கில் கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

(21) உனக்குச் சொந்தம் என்ற பாவனையை நீ ஒழித்து விடவேண்டும்.

(22) இதர மனிதர்களுடைய காரியங்களில், அநாவசியமாய்த் தலையிடுகிறதாகிய சாதாரணமான வழக்கத்தில் விருப்புக்கொள்ளாதே, நீ கண்டிப்பாய் இவ்வாசையை அடக்கிவிடவேண்டும்.

(23) இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன, எவ்வித அபிப்பிராய முள்ளவனானாலென்ன, இவைகள்

உன்னுடைய காரியங்களல்ல, அவைகளை அவனிஷ்டப்படி நடத்திக்கொள்ளும்படி விட்டுவிட நீ பயிலவேண்டும்.

(24) வேறொருவனோடு தலையிட்டுக் கொள்ளாதவரையில், தன்னிஷ்டப்பிரகாரம், ஒருவனுக்கு நினைக்கவும், பேசவும், செய்யவும் பூர்ணஸ்வாதீனமுண்டு, எது சரியென்று உனக்குத் தோன்றுகிறதோ, அதை ஸ்வேச்சையாய் செய்ய நீ உரிமை பாராட்டுகிறாயல்லவா? இந்த உரிமையைப் பிறருக்கும் நீ அளிக்கவேண்டும். அதை அவன் செலுத்தும் போது அவனைக் குறித்துப்பேச உனக்குப் பாத்தியமில்லை.

(25) அவன் தப்பி நடக்கிறானென்று நீ நினைத்தால், அவனைத் திருத்த நீ சமயம் பார்த்து உபாயந்தேடித் தனிமையாய் மரியாதை தவறாது, பேச முடியுமாகில், அவன் தவறுதலை நீ ஒருவேளை அவனுக்கு ரூபிக்கலாம் என்றாலும், அநேக சமயங்களில், இதுவே தகாது; தலையிடுதலாய்ப்போய்விடும்.

(26) எக்காரணத்தைக்கொண்டும், மூன்றாம் மனிதனிடம் நீ போய் எதைப்பற்றியும் பறைசாட்ட வேண்டாம் அது கெட்ட செய்கையாகவிருக்கிறது.

(27) ஒரு குழந்தையையாவது, ஒரு மிருகத்தையாவது வேறுயாராவது உபத்திரவம் செய்வதை நீ கண்டால், அதை நீ தடுக்கப் பிரவேசிப்பது உனது கடமை, எவனாவது ராஜாங்க சட்டத்திற்கு விரோதமாய் நடப்பதை நீ பார்த்தால், அதிகாரிகளிடம் நீ அதைத் தெரிவிக்க வேண்டும்.

(28) உன்னிடம் கற்க,வேறொருவன் உன்னிடம் வருவானாகில் அவனுடைய தப்பிதங்களை அவனுக்கு நீ சாந்தமாய் எடுத்துக்காட்டுவது, உன் கடமையாக ஏற்படலாம். இவ்விதங்களில் தவிர. உன் சொந்தகாரியத்தைக் கவனி, மௌனமாகிற நற்குணத்தை நீ கற்றுக்கொள்.

(29) சித்திகளுக்காசைப்படாதே. உனக்கு அவைகள் வேண்டியது நன்மையென்று குருநாதன் அறியுங்காலத்தில் அவைகள் உனக்குவரும்.

(30) பக்குவம் வருமுன் அவைகளை அடைந்தால் தீங்கை விளைவிக்கும், தவிர தந்திரமுள்ள க்ஷுத்ர தேவதைகள் இவ்வித சித்தர்களுக்குப் பலவிதங்களிலும் தப்பு வழியைக் காட்டும், அல்லது அச் சித்திப் பெற்றவர்கள் கருவமடைந்து, தாங்கள் தவறக் கூடாதவர்களென்றும் நினைக்கலாம். இது எப்படியானாலும் சரி, சித்திகளை அடையும் பொருட்டுச் செலவழிக்கும் காலத்தையும் பிரயத்தனத்தையும், பிறர்க் குதவி புரிவதில் உபயோகப்படுத்தலாம்.

(31) பக்குவகாலம் வரும்பொழுது சித்திகள் வரும்; வந்தேதீரும். முந்தியே அவைகளுனக்கு வருவது பிரயோஜனகரமென்று, குருநாதன் கண்டால் எவ்விதம் கெடுதியின்றி நீ அடையலாமென்பதை அவர் உனக்குப் போதிப்பார், அதுவரையில் அவைகளில்லாமலிருப்பதே உனக்கு நல்லது.

## ஜூன் மாசம்.

மாசாந்தர அப்யாஸம்:—நீ குருநாதனைச் சரணமடைந்து முற்றிலும் அவரை நம்பவேண்டும் உன்னிடத்திலேயே உனக்கு தைரியமான நம்பிக்கை யிருக்கவேண்டும்.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—க்ஷமை (பொறுமை).

எதனிடத்தும் அநுகூலமாயிரு. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணங்கியோடு. எல்லாரிடத்தும் அநுகூலமாயும், சாந்தமாயும், பொறுமை யுள்ளவனாயும் இரு.

2-வது வாரம்:—சந்துஷ்டி.

நீ எப்பொழுதும் சந்துஷ்டி யுள்ளவனா யிருக்கவேண்டும். நீயது எதுவானாலும், அது நிலையில்லாததென்பதை ஞாபகத்தில் வைத்து நீ எப்பொழுதும் சந்தோஷமாயும் நிலைபெற்ற சாந்தமனத்தோடு கூடியவனாயு மிருக்கவேண்டியது உனதுகடமை.

3-வது வாரம்:—ஏகாக்கிரதை.

நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து உன்னை ஒரு நிமிஷங்கூட ஒனறும் திருப்ப இயலாதிருக்கும்படி ஒரே மனத்தினனாய் இருக்கவேண்டும்.

4-வது வாரம்:—திடநிச்சயம்.

குருநாதனை நீ பார்த்துவிட்டால் உனக்கு அவரிடம் திடநம்பிக்கை யேற்பட்டு ஜன்மஜன்மங்களாக அதிகரித்து விடும்.

5-வது வாரம்:—நிக்கிரகம்.

சுத்தமான கண்ணாடியின் வழியே சூரியப்பிரகாசம் துலங்குவது போல் ஸத்யமானது உன் வழியாக சுத்தமாய்ப் பிரகாசிக்க வேண்டும்.

## தினசரி அப்பியாசம்.

(1) எதனிடத்தும் அநுகூலமாயிரு. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணங்கியோட.

(2) எல்லாரிடத்தும் அநுகூலமாயும், சாந்தமாயும் க்ஷமையாயும் இரு. எல்லாரையும் வித்தியாசமின்றிப்பார்.

3. நீ எல்லாருக்கும் உதவிபுரிய வேண்டுமானால் எல்லாரையும் பற்றி நன்குயறிநது கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொருவனிடமும் ஒவ்வொரு வஸ்துவினிடமும் நன்மையும் இருக்கின்றது தீமையும் இருக்கின்றது.

5. உன்சொந்தமதத்தில் உனக்கிருக்கும் அபிமானம் போல் இதர மதஸ்தர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளி

னும் நீ மனப்பூர்வமான அபிமானமுள்ளவனாக இருக்கவேண்டும். உன் மதத்தைப் போலவே ஏனையமதங்களும் ஈசுவரனிடத்துச் சேர்க்கக்கூடிய பலவழிகளே.

(6) எவன் ஈசுவரன் வழியே நிற்பானோ அவன் நம்மில் ஒருவனாகிறான். அவன் ஹிந்துவானாலும்சரி, பௌத்தனானாலும் சரி, கிறிஸ்தவனானாலும் சரி, மகம்மதியனானாலும் சரி, இந்தியன், இங்கிலீஷ்காரன், சீனன், ருஷியன், அல்லது வேறு யாரானாலும் சரி, சிறிதும் பாதகமில்லை.

(7) ஆடம்பரக் கிரியைகளைப் பற்றிநிற்பவர்களைப் பற்றி நீ நிந்திக்கவேண்டாம்.

(8) தீயது எதுவானாலும் நிலையில்லாத தென்பதை ஞாபகத்தில் வைத்து, எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாகவும் சாந்தமுள்ளவனாகவுமிருக்கவேண்டும்.

(9) குருநாதன் அவர் சிஷ்யன் மூலமாகவே தமது சக்தியைப் பிறர்பால் செலுத்தும்படி அடிக்கடி நேரும். ஆகையால் சிஷ்யன் எக்காரணத்தாலும் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடுக்கலாகாது. இடங்கொடுப்பின் குருநாதன் அவ்விதம் செய்யமுடியாது. ஆகையால் சந்தோஷமுள்ளவனாக இருத்தல் வேண்டும்.

(10) மனத்தளர்ச்சி கொள்ளுதல் எப்போதும் பிசகு. ஏனெனில் அது வேறு மனிதர்களையுங் கூட, துயரத்திற்குள்ளாக்கி அவர்களது வாழ்க்கையையும் துயரத்திற்குட்படுத்துகிறது.

(11) தினசரி வாழ்க்கையில் நேரிடும் சங்கடங்களை இலகுவாக்கிக் கொள்ளவேண்டும். அதாவது அவைகளைப் பற்றி விசனத்துக் கிடங்கொடாமல் இலேசாய்த்தள்ளிவிடவேண்டும்.

(12) பெரும்பான்மையோர் அற்பவிஷயங்களில் கிலேசப்பட்டு காலத்தை விருதாவாக்கிக்கொள்வதுபோல, அற்பவிஷயங்களில் நீ கிலேசத்தை அடையாமல் அதினின்று நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்.

(13) வியசனம், கஷ்டநஷ்டம், வியாதி இவைகள் போன்று வெளியினின்று நேரிடும் விஷயங்களை நீ சந்துஷ்டியுடன் பொறுத்துக் கொள்ளவேண்டும். இவைகள் பூர்வ ஜன்ம கர்மங்களின் பலன்கள். அதாவது முன் ஜன்மங்களைச் சேர்ந்த (பிராரப்த) கர்மங்களின் பலன்கள், இந்த ஜன்மத்தவைக ளல்லாததால் மாற்றமுடியாதவைகள். ஆகையால் அவைகளைக்குறித்து நீ வருந்துவது நிஷ்பிரயோஜனமாம். இவைகளை நினையாது, இப்பொழுது நீ செய்யும் செய்கைகளைக்கவனி; இவைகள் உனது அடுத்த ஜன்மத்தில் பலனளிக்கும் காரணங்களானதையால் அவற்றை நீ மாற்ற முடியும்.

(14) மனத்தளர்ச்சிக்கும் சோகத்திற்கும் நீ இடங்கொடுக்காதே. அது எப்பொழுதாவது வருமானால், அதை உடனே நீ விரட்டிவிடு.

(15) நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து ஒரு நிமிஷங்கூட வேறொன்றை நாடி நீ திரும்பலாகாது.

(16) உன் முன்னிலையில் நீ ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய முக்கியதர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம.

(17) மேன்மார்க்கத்திற் செல்லுவதில் நீ ஆலோசிக்கவேண்டிய அவசியமில்லாதபடி உன் முன்னேக்கத்தையே நாடியவனாயிருக்கவேண்டும். இங்குமங்கும் திரும்பி அதனின்று விலகுதல் உதவாது.

(18) நீ மேன்மார்க்கத்தில் செல்ல வேண்டுமானால் உன்னுடைய திடசங்கல்பமானது துளைக்கப்பட்ட எஃகு போல் இருத்தல் வேண்டும்.

(19) அம்மார்க்கத்துடனே நீ ஒருமைப் படல் வேண்டும்.

(20) நீ தொடும் எக்காரியத்தையும் உன் பூரண மான திறமையுடன் செய்துமுடி.

(21) நீ திடசங்கல்பம் கொள்ளுவாயானால் உன்னால் செய்து முடிக்கக்கூடாதது ஒன்றுமில்லை.

(22) நீ குருநாதனை ஒருதரம் தரிசிப்பாயானால் நீ அவரிடம் பல ஜன்மங்களுக்கு பூர்ண நம்பிக்கையுள்ளவனாய் நிகழ்வாய்.

(23) நீ அவரைப் பார்த்திராவிட்டாலும், அவரை சாக்ஷாத்கரித்து அவரிடத்தில் அபயம் புகுவாயாக. இன்றேல் அவரும் உனக்கு உபகரித்தல் சிரமம்.

(24) குருநாத னிடத்தில் பூர்ணமான நம்பிக்கை இல்லாவிடில் அவரது அன்பும் சக்தியும் உனக்குப் பெருக மாட்டா.

(25) உன்னுடைய குருநாதனிடத்து நீ பக்தியோடு விளங்குவதுடன் உன்னிடத்தும் தைரியம் கொள்ளவேண்டும். உன்னை நீ நன்றாய் அறிந்துவிட்டதாக எண்ணாதே அப்படியானால், அதுவே உன்னை நீ நன்றாய் அறிந்து கொள்ளவில்லை யென்பதற்கு போதுமான சாக்ஷியமாகும் பொதுவாக, சேற்றில் புதைந்து வெளிப்பார்வைக்குத் தேங்காய் போல் காணப்படும் கொட்டாங்கச்சியைப் பார்த்து மயக்க முறுகிறாய்.

(26) நீ ஈசுவரனின் ஒரு பொறியாவாய்.

(27) ஸர்வ பராக்ரமசாலியான ஈசுவரன் உன்னிடமிருப்பதால் நீ சங்கல்பித்து செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை

(28) நீ பின்வருமாறு அடிக்கடி சிந்தித்தல் விசேஷ பலனைத்தரும். "ஒரு மனிதன் செய்தகாரியத்தை இன்னொரு மனிதனும், செய்யக்கூடும். நானும் ஒரு மனிதனே. ஈசுவராமசமும் என்னிடத்தில் உள்ளது. நான் இதைச் செய்யக்கூடும், இதைச் செய்தே முடிப்பேன்."

(29) சூரியகாந்தி சுத்தஸ்படிகததின் மூலமாய் எப்படிப் பிரகாசிக்குமோ அப்படியே சத்தியமானது உன் மூலமாய் பிரகாசிக்கட்டும்.

(30) கர்வத்தைத் தவிர்மின ஏனெனில் அது அறிவின்மையால் ஏற்படுகின்றது.

## சூலை மாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—ஈசுவரனுடன் ஐக்கியப்பட இச்சிப்பதே அன்பு. நீ ஈசுவரனிடத்து அத்யந்த பக்தியுடையவனானால், அவர் மார்க்கத்தை அநுசரித்து அவர் செய்வதுபோல் செய்யவேண்டும்.

## வார அப்பியாசம்.

1-வது வாரம்:—எந்த உயிர்க்கும் ஒருவித ஹிம்சையும் செய்யாதிருக்கக் கருத்துக்கொள்.

வம்புப் பேச்சு, கொடுஞ்செயல், மித்தியாசாரம் இம் மூன்று பாபகார்யங்களையும் நீ விலக்கவேண்டும். அவைகள் ஜீவபூதங்களின் விகாஸமுறைக்குத் தடை செய்பவைகள். ஏனெனில், அவைகள் அன்புக்கு நேரெதிரிடையான குற்றங்கள். ஆகையால், எப்போதும் ஈசுவர பக்தியானது தன் ஹிருதயத்தில் பரிபூர்ணமாயிருக்க விரும்பு

வோன் இம்மூன்று தீக்குணங்களும் தன்னை அணுகாதபடி விழிப்பாயிருக்கவேண்டும்.

2-வது வாரம்:—வம்புப்பேச்சு எவ்வளவு இழிவும், கொரேமுமான பாபம் என்பதை அறிய முயல்வாயாக.

(1) அதை நீ முற்றும் விலக்கவேண்டும்.

(2) ஒருவரைப் பற்றியும் கெடுதலாய்ப் பேசாதே.

(3) எவரேனும் பிறரை இகழ்ந்து பேசுவாராயின், நீ செவி கொடாதே.

(4) நீ அத்தகையருக்கு சாந்தமாய்ப் பின்வருமாறு சொல்லலாம்:—"நீ சொல்வதொருக்கால் நிஜமல்லாமலிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட, அதைப்பற்றி நீ பேசாதிருப்பது நலம்."

(5) எவனைப் பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட்டால், நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட அதைப்பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பதே நல்லது.

(6) பிறர் செய்யுங் காரியங்களுக்கு நீயாக ஒரு கருத்தைக் கற்பிக்காதே. அதாவது இன்ன உத்தேசத்தைக் கொண்டு செய்திருக்கலாம் என்று, உன் எண்ணம் போன போக்குப்படி ஒரு காரணங் கல்பிக்க முயலாதே.

(7) மற்றவர்களைக்குறித்து உனக்குத்தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது

3-வது வாரம்:—பிறருக் குதவிசெய்ய எப்பொழுதும் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பரோபகார கைங்கர்ய விருப்பம் உன்னிடம் பரிபூர்ணமாய் ஏற்பட்டு, அதனால் உன்னைச் சுற்றுமிருக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்லாது, புல்பூண்டு மிருகம் முதலிய ஜீவஜந்துக்க

ளெல்லாவற்றிற்கும், சதா சமயம் பார்த்திருந்து நீ உதவி செய்து வரவேண்டும். இவ்வுதவி ஒவ்வொருநாளும் சிறிய விஷயங்களிலேயே ஏற்படவேண்டும். அதனால் பரோபகார வழக்கம் ஏற்பட்டு, அபூர்வமாய்ப் பெரிய காரியம் சம்பவிக்கும்பொழுதும் நீ அதை விட்டுவிடாது அங்கீகரிக்க இயலுவாய்.

4-வது வாரம்:—ஈசுவரன் அன்பேயாதலால், நீ ஈசுவரனுடன் ஐக்யப்பட விரும்புவாயாகில், நீயும் பூர்ணமான அன்பையும் பிறர் நலத்தையுமே கருத்திற்கொண்டு நடைபெறவேண்டும். இந்த குருசிஷ்ய மார்க்கத்திற் பயிலுவோன், தன் ஹிருதயத்தின் மூலமாக உலகெங்கும் ஈசுவரனின் அருட் பிரவாஹத்தைப் பெருகச்செய்யும் ஜீவிதமான அக்கினி ஜ்வாலைபோல் திகழ்வான்.

5-வது வாரம்:—நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாக இருக்கவேண்டும்.

எல்லோரையும் சாந்தமாகவே நிதானிப்பாயாக.

சாந்தமாய்ப் பேசு.

சாந்தத்துடன் ஒருவனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்.

## தினசரி அப்பியாஸம்.

(1) எல்லாச் சாதனங்களிலும் அன்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில், அது ஒரு மனிதனிடம் போதிய பலமுள்ளதாயிருக்குமாயின், மற்ற நற்குணங்களையெல்லாம் சம்பாதித்துக் கொள்ளும்படி அவனைத் தூண்டுகின்றது.

(2) தினசரி பிரவிர்த்தியில், இதற்கு இரண்டு வித பிரயோகம் (i) எந்த உயிருள்ள வஸ்துவுக்கும், ஒரு ஹிம்

சையையும் செய்யாதிருக்கக் கருத்துக்கொள்வது, (ii) எப்பொழுதும் பிறர்க்குதவி செய்ய சமயம் நோக்கி நிற்பது.

(3) பரோபகாரம் செய்வதில் தீவ்ரமாய் உழைக்க வேண்டும். சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பரோபகார கைங்கரிய விருப்பம் உன்னிடம் பரிபூர்ணமாயேற்பட்டு, அதனால் நீ நிறைந்தவனாய், உன்னைச் சுற்றுமிருக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்லாது, புல்பூண்டு மிருகம் முதலிய ஜீவஜந்துக்களெல்லாவற்றிற்கும், சதாசமயம் பார்த்திருந்து நீ உதவி செய்துவரவேண்டும். இவ்வுதவி ஒவ்வொருநாளும் சிறிய விஷயங்களிலேயே ஏற்படவேண்டும். அதினால் பரோபகார வழக்கம் ஏற்பட, அபூர்வமாய் பெரியகாரியம் சம்பவிக்கும்பொழுதும், நீ அதை விட்டுவிடாது அங்கீகரிக்க இயலுவாய்.

(4) துக்கத்தாலாவது வேறு சங்கடங்களாலாவது அல்லது கிலேசங்களை யடைந்தாவது, வேறு ஏதாவது ஸஹாயத்தை விரும்பியாவது மனச் சஞ்சலப்பட்டுக் கொண்டு பலர் இருக்கின்றார்கள். பிரதிதினமும் அத்தகையரொருவரைப் பற்றி நினைத்து, அவர் பேரில் அமிருத வர்ஷம் போன்ற உன் அன்பைச் செலுத்து.

(5) உதவி செய்யும் பொருட்டு உன் அன்பின் சக்தியைப் பெருகச்செய்வாயானால், பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் அதற்குப் பலன் நிச்சயமாய் இருந்தே தீரும். ஈசுவர ஆக்ஞையை அல்லது அவர் நியதியை நீ அறிவாயானால், நீ செய்யும், உதவிக்குப் பலன் உண்டென்பது உனக்குத் தெரியும்.

உலகத்தின் கண் உனக்கு அன்பிருக்குங் காரணத்தால், உன்னை நீ அதற்கே அர்பணம் செய்துகொண்டு லோகோபகார கைங்கர்யங்களில் நீ பிரவிர்த்திக்கவேண்டும்.

(6) மேன் மார்க்கத்திலேறும் மனிதன் ஜீவிப்பது தனக்காகவல்ல, பிறருக்காக. அவன் தன்னை மறந்தவனாகி பிறருக்கு உபகாரம் செய்வதிலேற்படுகிறான்.

(7) எல்லாரிடத்தும் அன்புள்ளவனாயும் சாந்தமுள்ளவனாயும் க்ஷமையுள்ளவனாயும் இரு.

(8) உலகத்தில் மற்றெல்லாவற்றையும் பார்க்கிலும் அதிக கொடியவையான மூன்று பாபச்செயல்கள் உள்ளன. வம்புப்பேச்சு, கொடுஞ்செயல், மித்தியாசாரம், இவைகள் அன்புக்கு விரோதமான பாபங்களாகையால் எல்லா அபிவிருத்தியையும் கெடுத்துவிடும்.

(9) வம்புப்பேச்சு, முதலில் கெட்ட எண்ணம் தோன்றிய பிறகே ஆரம்பிக்கிறது. அதுவே ஒரு பாதகம்.

ஏனெனில் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மையும் இருக்கிறது; அவ்விதமே தீமையும் நிற்கின்றது, நமது சித்தவிர்த்திப் பிரயோகத்தால், இவ்விரண்டையும் நாம் விருத்தி செய்யலாம்.

இவ்விதமாய் ஜீவபூத விகாஸத்திற்கு நாம் அநுகூலமாயாவது, விக்கினமாகவாவது ஏற்படலாம்.

நாம் ஈசுவர சங்கல்பத்தை அநுசரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம். இது மிக இழிவுள்ளதும் கோரமுமான பாபச் செயல்.

(10) வம்புப்பேச்சினால் உண்டாகும் கெடுதிகளாவன.

(i) நீ எப்போதும் நல்ல சித்தவிர்த்தியைக் கொள்ள வேண்டியிருக்க கெட்ட சித்தவிர்த்தியையே கொண்டு உன் அயலார் மனங்களையும், அதனாலேயே வியாபிக்கச்

செய்து உலகத்தில் துக்காபிவிருத்தியைச் செய்வோனுவாய்.

(ii) நீ நினைத்த துர்க்குணமானது உன் சகோதரனிடமிருக்குமானால், அதை நீ போஷித்துப் பலப்படுத்துகிறாய். நீ உனது சகோதரனைக் குணப்படுத்த வேண்டியிருக்க, இவ்விதம் நீ அவனை மிகவும் கெடுக்கிறாய் அல்லது அவனை உன்னுடைய எண்ணமானது கெடுதியைச் செய்ய தூண்டுகிறது.

(iii) நல்ல எண்ணங்களால் உன் சித்திவிர்த்தி நிறைந்திருக்க வேண்டியிருக்க, உனது கெட்ட எண்ணங்களால் அதை நீ நிரப்பிக்கொள்ளுகிறாய், உனது அபிவிருத்தியும் மங்குகின்றது; உன் அகத்தைப்போலவே புறமும் விளங்குகின்றது உன் முக மலர்ச்சியும் சரீரத்திற் செழிப்பும் குன்றி அவலக்ஷணமான தோற்றம் ஏற்படுகின்றது.

(iv) இவ்விதவம்பன் வேறு மனிதர்களையும் தன் பாதகத் தொழிலுக்குக் கூட்டாளியாகச் செய்துகொண்டு தன்னையின்றமட்டும் முயலுகிறான். பிறகு இவனோடு அவர்களும் சேர்ந்து ஒருவன் மீது கெட்ட சிந்தனைகளைப் பிரயோகிக்கிறார்கள்.

(11) வம்புப்பேச்சு எவ்வளவு இழிவுள்ளதென்றும் கோரமானதென்றும் நீ தெரிந்துகொள். இதை நீ முற்றிலும் ஒழிக்கவேண்டும். (ii) ஒருவனையும் நீ இகழ்ந்து பேசாதே.

(iii) எவரேனும் பிறரை இகழ்ந்துபேசுவாராயின் நீ செவி கொடாதே.

(iv) நீ அத்தகையருக்குச் சாந்தமாய்ச் சொல்லு "நீ சொல்வதொருக்கால் நிஜமல்லாமலிருக்கலாம், நிஜமாயிருந்தாலுங்கூட அதைப் பற்றிப் பேசாதிருப்பது நலம்."

(12) எவனைப் பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட்டால் நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயி ருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட நீ அதைப்பற்றி பே சாமலிருப்பது நல்லது.

(13) பிறர் செய்யுங்காரியங்களுக்கு நீயாக ஒரு கரு த்தைக் கல்பிக்காதே. அதாவது இன்ன உத்தேசத்தைக் கொண்டு செய்திருக்கலாம் என்று உன் எண்ணம் போன போக்குப்படி ஒரு காரணம் கற்பிக்க முயலாதே. அவ னுடைய செய்கைகளுக்கு நீ நினையாத காரணங்களிருக்க லாம் அவைகள் அவனுடைய குருநாதனுக்கு மட்டும் தெரியவரும்.

(14) மற்றவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது.

(15) கருதிச்செய்யும்கொடுஞ்செயல்:-வேண்டுமென் றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வதாகும். எல்லாப் பாபங்களிலும் இது பெரும்பாபம் இது மநுஷ்ய பிரவிர்த்தியல்ல அசுரச் செய்கை.

மனிதர்கள் இதைத்தினசரி செய்துகொண்டே வருகி றார்கள்.

(16) திருஷ்டாந்தங்கள்:—

i ரோமன் காதலிக் மத விசாரணை சங்கத்தார் இதைச் செய்தார்கள்; ii தங்கள் மதத்தின் பெயரால் இதை மதாபிமானிகளும் செய்துவந்தார்கள். iii ஜீவராசி களின் உடற்கூறு சாஸ்திர பரீக்ஷகர்கள் இன்னும் இதைச் செய்கிறார்கள். iv அநேகம் பள்ளிக்கூட உபாத்தியா யர்களும் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். v அநே கர்கள் வெளியிற் சென்று, வேட்டை விளையாட்டென்று சொல்லி புத்திபூர்வமாய் ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்து க்களைக் கொல்கிறார்கள்.

vi பிறனொருவன் மனத்தை நோகச் செய்யவேண்டுமென்ற கருத்துடனேயே வன்சொல் உரைப்பவனும் கொலை செய்வோனவன்.

(17) ஈசுவரனிடத்துச் செலுத்தவேண்டிய அன்பை உத்தேசித்தே, சமயம் நேரிடும்பொழுது இவ்வித கருமங்கள் (மேற்கண்ட 1-முதல் 5-வரையுள்ள திருஷ்டாந்தங்கள்) கூடாவென்று நீ தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும்.

(18) கருதாது செய்யும் கொடுஞ்செயல்:—சாதாரணமாய் ஆலோசியாமல் நேரிடுகிறது. அசாக்கிரதையாலும் இது நேரிடுகிறது. ஒவ்வொரு செய்கையும் எவ்விதம் இதரர்களை பாதிக்குமென்பதைப் பற்றி நினைக்க மறப்பதினாலும் நேரிடுகிறது.

உதாரணம்:

| | |
|---|---|
| i தான் நியாயமாய்க்கொடுக்கவேண்டிய சம்பளம், கூலி இவைகளைச் சரியாய்க் கொடுக்காமல் பிடித்துக் கொள்ளுகிறது. | பணத்திலும் இதர பொருள்களிலுமுள்ள ஆசையால் |
| ii தன மனைவி மக்களுக்குத் தக்க உணவு அளிக்காமலிருக்கிறது. | ஷை |
| iii ஆத்மாக்களையும் சரீரங்களையும் கெடுக்கிறது. | தன் துராசையை திருப்தி செய்து கொள்ளுவதில் மாத்திரம் கவனமா யிருந்துகொண்டு. |
| iv தன்னுடைய வேலையாட்களுக்கு குறித்த தினத்தில சம்பளங் கொடுக்காமலிருப்பது. | தன்னுடைய சொற்ப தொந்தரவை உத்தேசித்து. |

v சிற்சில சமயம கவனியாது சொல்லுமொரு வார்த்தை வர்மத்துடன் சொல்லிய வார்த்தைபோல் துன்பத்தை விளைவிக்கும்.

(19) உனக்கு மேன்மார்க்கத்தில் பிரவேசிக்க இஷ்டமிருந்தால், நீ செய்யுங்காரியங்கள் என்ன பலன்களை விளைவிக்குமென்று நீ ஆலோசிக்க வேண்டும். இல்லாவிடில் யோசியாமல், நீ கொடிய பாதகங்களுக்கு உட்பட்டுவிட வேண்டிவரும்.

கருதாது செய்யும் கொடுந் செயலைப்பற்றி நீ ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.

(20) மித்தியாசாரம்; இது இன்னொரு வலிய கேடு. இது பயங்கரமான பாதகத்தை யுண்டாக்கி யிருக்கின்றது. இதற்கடிமைப்பட்டவன், தன்னை விட அறிவுள்ளவர்களை நிந்தித்து, தான் செய்யும் பிரகாரம் அவர்களையும் செய்யும்படி பலவந்தம் செய்கிறான். இக்கொடிய மாயாதர்மமாக்கத்துக் குட்பட்டு அன்பே வடிவாய்க் கொண்ட ஈசுவரன் பெயரை வைத்தே அநேகம் பாதகங்கள் நடந்திருக்கின்றன.

(21) உதாரணம். (1) பிராணிகளைப் பலிக்கொடுக்க வேண்டுமென்பது மித்தியாசாரம். இதைப் பார்க்கிலும் கொடிய மித்தியாசாரம், மனிதன் தனது ஆகாரத்திற்கு மாமிசத்தை ஆவசியகப் படுத்துவது.

(2) இவ்விந்தியாவில், மித்தியாசாரம் தாழ்ந்த ஜாதியார்களை எவ்விதம் நடத்தி வருகின்றதென்பதைக் கருதிப் பார். நெஞ்சம் புண்பட செய்கின்ற அன்பற்ற கொடுமையை உண்டாக்கி வருகிறது.

அதன் அற்ப அடையாளங்கூட உன்னிடத்தில் உண்டாகாதபடி நீ மிகவும் ஜாக்கிரதையாக விரு.

(22) அவர் அன்பே ஆகையால், அவருடன் நீ ஐக்கியப்பட இச்சித்தால், நீ ஸ்வலாபேச்சையை முழுமையும் விட்டு, அத்தியந்தம் பிரேமையோடு கூடினவனாக வேண்டும்.

(23) மேன்மார்க்கத்திலேறிய மனிதன் தன் ஹிருதயத்தில் நிரம்பி நிற்கும் ஈசுவர வாத்ஸல்யம் உலகெங்கும் பிரவேசித்துப் பிரகாசிக்க அவன் ஒரு ஜீவித அக்கினி ஜ்வாலைபோல் இருக்கிறான்.

(24) அன்பானது ஈசுவரனுடன் ஒன்றுகூடியிருக்க விரும்பும் ஒரு ஸங்கல்பம், தீர்மானம்.

(25) அது (அன்பு) ஈசுவரனோடு ஒன்றுகூடியிருக்க விரும்பும் இச்சைதானென்றாலும், உன் சொந்த ஆயாசம் வருத்தம் இவைகளிலிருந்து நீ விலக அல்ல. ஆனால் உனக்கு ஈசுவரனிடமிருக்கும் அத்தியந்த பக்திபோல், அவர் மார்க்கத்தை அநுசரித்து அவர் செய்வதுபோல் செய்வதே.

(26) இச்சங்கற்பம் சித்திபெற வேண்டுமாயின், அது உனது பூர்ணஸ்வபாவ குணமாகி, வேறு ஒரு குணமும் வர இடங்கொடாதிருக்கவேண்டும்.

(27) நீ ஈசுவரனோடு ஐக்கியப்பட விரும்புவது, உனது ஸ்வப்பிரயோஜனத்துக்காக இராது. உன மூலமாய், ஈசுவரா நுக்கிரஹ அன்பு, மற்ற உன் உடனொத்த மனிதர்களுக்கும் பெருகும்படி நீ ஒரு வழியாயேற்பட வேண்டும்.

(28) உன் மனதைப் பரோபகார சிந்தையிலேயே பூர்ணப்படுத்திக்கொள்வாயாகில், உனக்கப்பொழுது ஸ்வப்பிரயோசனத்தை யெண்ணுவதற்கே அவகாசமிராது.

(29) நீ எப்பொழுதும் சாந்தனாயும், உபகாரியாயும் விவேகத்துடன் கூடினவனாயும், பிறருக்கிணங்க நடக்கக்கூடியவனாயும் இருக்கவேண்டும்,

(30) குருநாதன் சந்நிதான பரிசுத்த வொளியில், அவரைப் போலாக வேண்டுமென்ற இச்சை ஒன்று தவிர மற்றெல்லா இச்சைகளும் நசிக்கின்றன.

(31) ஸத், சித், ஆநந்தம் இம்மூன்றும் ஈசுவர ஸ்வரூபத்தின் மூன்று தோற்றங்கள், அவர் தொண்டர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ள விரும்பும் நீயும் அவரது ஸ்வரூபத் தோற்றத்தின் அம்சங்களை உலகத்தில் காட்ட வேண்டும்.

## ஆகஸ்டு மாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—உன் மனத்தை வசப்படுத்த வேண்டும்; அதைத் திரிந்து கொண்டிருக்க விடவேண்டாம்.

### வார அப்பியாசம்.

(1) எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனதை நிறுத்து, அப்பொழுது அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்.

(2) "குருநாதன் இதைக் குறித்து என்ன நினைப்பார்," என்று அடிக்கடி நீ நிதானித்துப் பார்க்கவேண்டும். நீ முற்றிலும் சத்தியமாய் நடக்கப் பயிலவேண்டும். முதலில் சத்திய எண்ணத்தையே கொள்ளவேண்டும்.

(3) மற்றவர்களைக் குறித்து உனக்குள்ள அபிப்பிராயம் உண்மையானதாயிருக்கவேண்டும். அவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளக்கூடாது.

(4) துக்கத்திலாவது, கஷ்டத்திலாவது, ஆழ அமுங்கியும் சகாயத்தை விரும்பியும் இருக்கின்ற யாரையேனும் நீ ஆலோசித்தறிந்து, தினந்தோறும் அவன்மேல் உன் அன்பான சிந்தனையைத் தீவ்ரமாய்ச் செலுத்து.

(5) உன் மனதைச் சோம்பேறித்தனமாயிருக்கவிடாதே. எடுத்த காரியம் முடிந்ததும், நல்ல எண்ணங்களே உன் மநத்தில் வந்து தங்கும்படி எப்பொழுதும் நல்ல எண்ணங்களே உன் மனத்தைப் பின்பற்றி நிற்கட்டும்.

## தினசரி அப்பியாசம்.

(1) எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனத்தை நிறுத்து.

(2) மனத்தில் பதற்றம் வராமல் மநத்தை நிலைபெறும்படி செய்து கொள்ளவேண்டும். அப்படியானல் மநஸ் கலக்கமற்று சாந்தமாயிருக்கும்.

(3) மனது நீ அல்ல, அது, உன் உபயோகத்திற்காக நீ அடக்கியாளவேண்டிய ஓர் கருவி.

(4) மனத்தளர்ச்சிக்கும், சோகத்திற்கும் நீ இடங்கொடாதே. மனத்தளர்ச்சி பிசகானது. உனக்கது, எப்பொழுதாவது சம்பவித்தால், அதை உடனே நீ தள்ளிவிடு.

(5) உன்னுடைய சித்தவிர்த்தி இருக்கவேண்டியபடியிருந்தால் உனது செய்கைகளைப்பற்றிக் கவலையிராது.

(6) எதை குருநாதன் நினைக்க மாட்டாரென்று நினைக்கிறயோ, அதை நீ எப்பொழுதும் நினைக்கலாகாது.

(7) நீ உன் மனத்தை அடக்கவேண்டும் அதைத் திரிந்துகொண்டிருக்கவிட வேண்டாம்.

(8) அடிக்கடி உன் எண்ணங்களை நிதானித்துப்பார்த்து குருநாதன் இதைப்பற்றி என்ன நினைப்பார் என்று சிந்திக்கவேண்டும்.

(9) மநோவாக்குக்காயங்களில் எப்பொழுதும் நீ சத்தியவானுயிருக்கக் கற்றுக்கொள். முதலில் மனத்தைச்சத்

தியமான வழியில் பழக்கவேண்டும். பிறகு ஸத்யமானது தானாகவே மற்ற இருதயங்களின் மூலமாய் விளங்கும்.

(10) அசத்திய எண்ணங்களும், விவேக மற்ற மித்தியாசாரங்களும் உலகத்தில் அநேகம் உள. இவைகளுக்குட்பட்டிருக்கும் எவனும் அபிவிருத்தியடைய முடியாது.

(11) ஒரு எண்ணத்தை அநேகம் பேர்கள் ஒரேவிதமாய்க் கொண்டிருந்தாலும் சரி, வெகு காலமாய் அது ஜனங்களால் நம்பப் பட்டிருந்தாலும் சரி ஜனங்களால் உத்கிருஷ்டமென்று நினைக்கப்பட்ட புஸ்தகங்களில் அது எழுதப்பட்டிருந்தாலும் சரி, இக்காரணங்களால் அதை நீ அங்கீகரிக்க வேண்டியதில்லை.

(12) அதை நீயே ஆலோசித்துப் பார்த்து. நியாயமானது தானென்று நீயே நிர்மாணித்துக் கொள்ளவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றி, ஒன்றும் தெரியாத ஆயிரம் ஜனங்கள் அதைக் குறித்து ஒரே விதமாய் அபிப்பிராயங்கொண்டிருந்தாலும், அவ்வபிப்பிராயத்தால் ஒரு பிரயோஜனமுமில்லையென்பதை ஞாபகத்தில் வை.

(13) மேன் மார்க்கத்தில் செல்ல இச்சிப்பவன், ஒவ்வொரு காரியத்தையும் தனக்குத்தானே ஆலோசித்து நிதானிக்கப் பயிலவேண்டும்.

(14) இவ்வுலகிலுள்ள பெருங்கெடுதிகளிலும், பந்தங்களிலும் மித்தியாசாரம் என்பது மிக வலியதாகும்.

அதிலிருந்து உன்னை நீ முழுவதும் விடுவித்துக்கொள்ளவேண்டும்.

பிராணிகளைப் பலிகொடுத்து வருவது, மித்தியாசாரம். இதைப்பார்க்கிலும் கொடிய மித்தியாசாரம், மனிதன் தனது ஆகாரத்திற்கு மாம்சத்தை ஆவசியகப்படுத்து

வது. இவ்விரு வகையிலுமுண்டாகும் பயங்கரமான மிருக வதையை நீ ஆலோசித்து நிதானி.

(15) மற்றவர்களைக் குறித்து நீ கொள்ளும் அபிப்பிராயம் உண்மையானதாக விருக்கவேண்டும். அவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில், நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது.

(16) மற்றவர்களெப் பொழுதும் உன்னைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பதாக நீ சங்கியாதே.

(17) உனக்குத் தீங்கென்று நீ நினைக்கின்ற வொன்றை ஒரு மனிதன் உனக்குச் செய்தாலும், உன்னைக் குறித்தது என்று நீ நினைக்கின்ற வொன்றை அவன் சொன்னாலும் "அவன் எனக்குக் கெடுதி செய்ய எண்ணங் கொண்டான்" என்று நீ உடனே நினைக்காதே. அநேகமாய் அவன் உன்னை நினைக்காமலே யிருந்திருக்கலாம்.

(18) ஒவ்வொரு ஜீவனுக்கும் அதனதன் சொந்த கஷ்டங்களிருக்கின்றன! அதனதன் எண்ணங்களே முக்கியமாய் அதனதனைச் சுற்றி நிற்கும்.

(19) ஒருமனிதன் உன்னிடத்தில் கோபமாய்ப் பேசினால் "அவனெனக்கு விரோதி, எனக்குக் கெடுதி செய்ய விரும்புகிறான்" என்று நினையாதே. அனேகமாய் வேறு யாராவதொருவன், அல்லது வேறு ஏதாவது ஒரு விஷயம் அவனைக் கோப மூட்டியிருக்கலாம், நீ அவனுக்கு எதிர்ப்பட்ட காரணத்தினால், அக்கோபத்தை உன்னிடம் அவன் காட்டலாம். அவனுடைய செய்கை மூடத்தனம். கோபம் எப்பொழுதும் மூடத்தனம் தானே, ஆகையினால் அவனைப்பற்றி நீ தவறாய் நினைக்கவேண்டாம்.

(20) வீம்புப்பேச்சுக்குக் காரணம்கெட்டஎண்ணம். அதுவே ஒரு பாதகம். ஏனெனில் ஒவ்வொருவனிடமும்,

ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மை நிற்கின்றது; அவ்விதமே, ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு வஸ்துவிலும் கெடுதியு மிருக்கிறது. நமது சித்த விர்த்திப் பிரயோகத்தால் இவ் விரண்டையும் நாம் விருத்தி செய்யலாம்; இவ்விதமாய் ஜீவபூத விகாஸத்திற்கு, நாம் அனுகூலமாயாவது விக்கின மாயாவது ஏற்படலாம் நாம் ஈசுவர சங்கற்பத்தை அனு சரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம்.

(21) உனது கெட்ட எண்ணம் உனது சகோதரனை த்தப்பிதஞ்செய்ய ஏவுகிறது; ஏனெனில் அவன் இன்னும் பூர்ணாபிவிருத்தியடைந்திராவிடில் அவனை நீ நினைக்கின்ற படியே ஆக்கிவிடலாம்.

(22) ஒவ்வொரு தினமும் துக்கத்திலும், கஷ்டத் திலும், மூழ்கியாவது, சகாயத்தை விரும்பியாவது இருப் பதாக உனக்குத் தெரிந்திருக்கும் யாரையேனும் ஆலோ சித்தறிந்து, அவன்மேல் தீவ்ரமாய் உன் அன்பான சிந் தனையைச் செலுத்து.

(23) நற்காரியங்களில் உன் மனச் சக்தியை எப் போதும் உபயோகி. ஜீவபூத விகாஸத்துக்கு நீ அநுகூல மான ஒரு சக்தியாய் ஏற்படு.

(24) இன்னொருவனிடமுள்ள கெடுதியை நீ நினைப் பாயாகில், மூன்று கெட்ட காரியங்களை நீ அதோடு கூட வே செய்கின்றாய்.

உன்னைச் சுற்றியுள்ள அயற் பக்கங்களிலும், உன் சகோதரனிடத்திலும், உன்னுடைய மனதிலும், நல்ல சித்தவிர்த்தியை அகற்றி, கெட்ட சித்தவிர்த்தியை வியா பிக்கச் செய்துகொண்டு, உலகத்தில் துக்கத்தை விருத்தி செய்கின்றாய்.

(25) பெரும்பான்மையோர் தங்களுக்கு நேரிடும் அல்பசங்கடங்களுக்காகக் கிலேசப்பட்டுக்கொண்டு மிருந்த

காலத்தை விருதாவில் போக்கிக்கொள்வது போலல்லாமல், நீ அவ்வித கிலேசத்தை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும்.

(26) ஒரு செய்கை யெவ்விதம் இதரர்களைப் பாதிக்கு மென்பதை ஜாக்கிரதைக் குறைவால் கவனியாது, மறந்துவிடுவதால் அதிக துன்பமுண்டாகிறது. நீ செய்யும் காரியங்கள் என்ன பலன்களை விளைவிக்குமென்று நீ ஆலோசிக்கவேண்டும்; இல்லாவிடில்யோசியாமல் நீ நேரும் பாதகங்களுக்கு உட்பட்டு விடவேண்டிவரும்.

(27) உன் மானஸிக சரீரம், கர்வத்துடன் பிரிந்து நின்று, தனனை மேலாகவும் மற்றவர்களைக் குறைவாகவும் கருத, இச்சிக்கின்றது.

(28) ஆடம்பரக் கிரியைகள் அநாவசியமென்று நீ உணரவேண்டும்; இல்லாவிடில், அவைகளைச் செய்யாதவர்களைவிட நீ சிரேஷ்டனென்று உன்னை நினைப்பாய்.

(29) உன் சரீரம் ஒன்றை விரும்புகையில் உனக்கு அது யதார்த்தமாய்த் தேவையாவென்று நிதானி, ஏனெனில நீயே ஈசுவரன்.

(30) மனதைச் சோம்பலாயிருக்கும்படி விடாதே, எடுத்த காரியம் முடிந்ததும் நல்ல எண்ணங்களை உன் மனத்தில் வந்து தங்கும்படி,எப்பொழுதும் உன்மநத்தைப் பின்பற்றி நிற்கட்டும்.

(30) நீ பேசுமுன் விழிப்புடன் ஆலோசி.

(31) கர்வத்தினின்று உன் மனதை நீக்கு; ஏனெனில் கர்வம் அறிவீனத்தினின்றே வருகின்றது. ஞானமில்லாதவன் தன்னைப் பெரியவன் என்றும், இது அது என்று குறித்துக் காட்டக்கூடிய பெரிய காரியங்களைச் செய்தவனென்றும் நினைக்கின்றான்; ஈசுவரன் ஒருவன் தான், பெரியவர். அவரால்தான எல்லா நற்காரியங்களும் செய்யப்படுகின்றன, என்று விவேகி யறிகிறான்.

# தியானக்கிரம விஷயம்.

## செப்டம்பர் மாசம்.

---

மாசாந்தர அப்பியாசம்:—:--வார்த்தை ஒவ்வொன்றையும் கவனித்துப் பேசு.

வார அப்பியாசம்.

1-வது வாரம்:—பேசுவதற்கு முந்தி நன்றாய் ஆலோசி.

(a) உன் பேச்சு உண்மையும், பக்ஷமும், உபகாரமுமானதா ?

(b) இப்பேர்க்கொத்த சந்தர்ப்பங்களில் குருநாதர் என்ன சொல்வார் என்பதை நன்றாய் ஆலோசி ?

(c) இல்லாவிட்டால் சொல்லத்தகாததை நீ தவறிச் சொல்லிவிடக்கூடும்.

2-வது வாரம்:—சொற்பப் பேச்சுடன் நிற்பது நல்லது.

நேரே விரும்பினாலன்றி அபிப்பிராயம் கொடாதே.

3-வது வாரம்:—கருத்து வேறு, வார்த்தை வேறென்று ஒருவரையும் நினையாதே; அவனது எண்ணங்கள் அவனுடைய குருநாதனுக்குத் தெரியும். அவனுடைய செய்கைகளுக்கு நீ நினையாத காரணங்களிருக்கலாம்.

4-வது வாரம்:—எவரைப்பற்றியாவது ஏதாவது சமாசாரம் கேட்டால் நீ அதை வெளிப்படுத்தாதே; அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட, அதைப் பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பது நல்லது; எக்காரணத்

தைக்கொண்டும் மூன்றும் மனிதனிடம் நீ போய் அதைப் பற்றி அலப்பவேண்டாம். அது ஒரு தீய பாபச்செய்கை யாயிருக்கிறது.

5-வது வாரம்:—இதர மனிதர்களுடைய காரியங்களில் அநாவசியமாய்த் தலையிடத்தூண்டும் விருப்பத்தை நீ கண்டிப்பாய் அடக்கிவிடவேண்டும்.

அடியில் கண்ட விதமான விஷயங்களில்தவிர, உன் சொந்தக்காரியத்தைக் கவனி. மௌனமாகிற நற்குணத்தை நீ கற்றுக்கொள். விலக்கு விஷயங்கள்:—

(a) ஒரு குழந்தையையாவது ஒரு மிருகத்தையாவது யாராவது உபத்திரவம் செய்வதை நீ பார்த்தால்,

(b) எவனாவது ராஜாங்க சட்டத்துக்கு விரோதமாய் நடப்பதை நீ பார்த்தால்,

(c) உன்னிடம் கற்க, வேறொருவன் உன் கீழ் வருவானாகில்,

கருதிச்செய்யுங் கொடுஞ்செயலை ஒழிக்கவேண்டுமென்று சமயம் நேரிடும்பொழுது நீ தெளிவாய்ப் பிறர்க்கு எடுத்துரைக்க வேண்டும்.

## தினசரி அப்பியாஸம்.

1. பேசுவதற்கு முந்தி நன்றாய் ஆலோசி.

2. உன் பேச்சு உண்மையும், பக்ஷமும் உபகாரமுமானதுதானா வென்று கவனி.

3. இவ்வித சந்தர்ப்பங்களில் குருநாதன் என்ன சொல்வார் என்று அடிக்கடி சிந்தித்துப்பார்.

4. இதுமுதலே, நீ பேசுமுன் விழிப்புடன் ஆலோசித்துப் பேசும் வழக்கத்திற் பயிலுவது நல்லது. ஏனெனில்

தத்துவோபதேச தீக்ஷை பெற வரும் சமயம் உனது வார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்கவேண்டிவரும், இல்லாவிட்டால் சொல்லக்கூடாததை நீ தவறிச் சொல்லி விடக்கூடும்.

5. திட்டமாய் உரைக்காததால் அசத்தியத்திற்குள்ளாகாதிருக்கும்பொருட்டு, நீ எப்போதும் நன்றாய் ஆலோசித்துப் பேசு.

6. அந்தப் பேச்சு வம்புப்பேச்சாய்விட்டால், பாபகரமாகிறது.

7. சூக்ஷ்ம சரீரம் (அதாவது காம சரீரம்) அநேக ஆசைகளுடன் கூடியது. உன்னைக் கோபங்கொள்ளும்படியாகவும், கொடிய வசனங்களைப் பேசும்படியாகவும், மாத்ஸரியங்கொள்ளும்படியாகவும், பணத்தில் பேராசை கொள்ளும்படியாகவும், மற்றவர்களுடைய பொருள்களைக்கண்டு அசூயை அடையும்படியாகவும், நீ மனக்கிலேசத்திற்குட்படும்படியாகவும் அது விரும்பும்

ஆனால் அவைகளொன்றும் உனக்கு (நிஜமான ஆத்மாவுக்கு) அவசியமில்லை.

8. சொற்பப்பேச்சுடன் நிற்பது நல்லது.

9. நீ பேசவிரும்புவது சத்தியமாயும், பிரியமாயும் பிரயோஜனமுள்ளதாயுமிருக்குமென்று முற்றிலும் நிச்சயமாயிருந்தாலொழிய, மௌனமே நல்லது.

10. மற்றையோர்களைக் காட்டிலும் சமர்த்தனாகப் பிறர் உன்னைக் கருதவேண்டுமென்றாவது, உலகிற் புகழ் பெறவாவது நடிக்க இச்சிக்காதே, பேச ஆசைப்படாதே,

11. மிக்க சாதாரணப்பேச்சு அநாவசியம், அது மூடத்தனமுமாம். அது வம்புப்பேச்சாய்விட்டால், பாப கரமாகிறது.

12. ஆகையால் பேசுவதைவிடக் கேட்கப்பழகு.

13. கேரேவிரும் வேலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே.

14. அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச்சொல்வதும் ஒரு முறை:—இந்நான்கில் கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

15. பிறர் செய்யும் எக்காரியத்திற்கும் நீயாக ஒரு காரணங் கற்பிக்காதே.

16 இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன. என்னசொன்னாலென்ன, எவ்வித அபிப்பிராய முள்ளவனாலென்ன இவைகள் உன்னுடைய காரியங்களல்ல. அவைகளில் ஒருவிதத்திலும் சம்பந்தப்படாமல், நீ இருக்கப் பயிலவேண்டும்.

17. ஒருவன் வேறொருவனோடு தலையிட்டுக்கொள்ளாதவரையில் தன்னிஷ்டப்பிரகாரம், அவனுக்கு நினைக்கவும், பேசவும், செய்யவும், பூர்ணஸ்வாதீனமுண்டு. அவனைக் குறித்துப் பேச உனக்குப் பாத்தியமில்லை.

18. கொடுமை யென்பது செய்கையில் மாத்திரமல்ல, வாய்ப்பேச்சிலு மிருக்கிறது. . வேண்டுமென்றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச்செய்யும் கொடுஞ்செயலாம்.

19. சில சமயங்களில் கவனியாது சொல்லுமொரு வார்த்தை, வர்மத்துடன் சொல்லிய வார்த்தைபோல் துன்பத்தை விளைவிக்கின்றது. ஆகையால் அறியாமல்கூட, உன்னைக் கொடுஞ்செயல்களுக் குட்படுத்திக்கொள்ளாது, ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

20. எதைக் குருநாதன் சொல்லமாட்டார் என்று நீ நினைக்கிறாயோ அதை ஒரு பொழுதும் நீயும் சொல்லலாகாது.

21. உன் மூலமாய், ஈசுவராநுக்கிரஹ அன்பு, உன் உடனுறைந்த மற்ற மனிதர்களுக்கும், பெருகும்படி நீ ஒரு வாய்க்காலா யேற்படவேண்டும்.

எவனைப்பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட்டால், நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட அதைப்பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பதே நல்லது.

23. நீ ஒருவரைப்பற்றியும் கெடுதலாய்ப் பேசாதே

24. ஒருவனைப்பற்றி வேறொருவன் கெடுதலாகப் பேசினாலும் செவிகொடுத்துக கேளாதே.

25. "ஒருவேளை நிஜமில்லாமலிருக்கலாம். அப்படியே நிஜமாயிருந்தாலும் அதைப்பற்றிப் பேசாமலிருப்பது நல்ல"தென்று மிருதுவாய்ச் சொல்.

26. நீ யாராவது ஒருவனைப்பற்றி எதையும் கேள்விப்பட்டால அதைப்பற்றி வேறொருவனிடமபோய் வீணாய் அலததாதே. அது முற்றிலும் கெட்ட காரியம். வம்புப் பேச்சு அன்புக்கு விரோதமான பாபச்செய்கை.

27. உன்னுடைய பேச்சு உண்மையானதாகவும் திட்டமானதாகவும், பெருக்கிக் கூறாமலும், உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும்.

28. ஈசுவரபக்தியை உத்தேசித்தே, சமயம் நேரிடும் பொழுது, இவ்வித கருமங்கள் கூடாவென்று நீ தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும். (க்ருதிச்செய்யும் கொடுமை) உடற்கூறுசாஸ்திர பரீக்ஷகர்கள் இதைச் செய்கிறார்கள் அநேகம் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். அவ்விதமே வேட்டை விளையாட்டென்று சொல்லி, புத்திபூர்வமாய், ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்கிறார்கள்.

29. இதரமனிதர்களுடைய காரியங்களில் அநாவசிமாய்த் தலையிடுகிற இன்னொரு சாதாரண விருப்பத்தை நீ கண்டிப்பாய் அடக்கிவிடவேண்டும்.

உன் சொந்தக்காரியத்தைக் கவனி. மௌனமென்கிற நற்குணத்தை நீ கற்றுக்கொள். (இதர விலக்கு விஷயங்களைப்பற்றி வாரஅப்பியாசத்தில் பார்.)

30. "ஒரு மனிதன் எதைச் செய்திருக்கின்றானோ அதை மற்றொருவனும் செய்யக்கூடும், நானும் ஒரு மனிதன். மேலும் மனிதனில் ஈசுவராம்சமுள்ளவனுயு மிருக்கிறேன். என்னாலிக்காரியம் செய்யக்கூடும். நான் செய்வேன் என்று அடிக்கடி உன் மனத்திற் திடங்கொள்வாயாக.

## தியானக்கிரம விஷயம்.

## அக்டோபர் மாசம்.

---

மாசாந்தர அப்பியாசம்:—செய்கை:—உன் முன்னிலை யில் நீ ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம்.

### வார அப்பியாசம்.

1-வது வாரம்:—உலகம் நல்லதென்று சொல்லும் ஒரு பெருங்காரியத்தைவிட, குருநாதனது பிரவர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறியகாரியம் மிகவும் மேன்மை யானதென்றறி.

2-வது வாரம்:—நியாயத்தைக் கைக்கொள்வதற்கே நீ நியாயமாய் நடக்கவேண்டும்; அதினால்வரும் வெகுமான த்தை யுத்தேசித்தல்ல; நீ வேலை செய்யவேண்டுவது வே லையை உத்தேசித்தே யல்லாது, அதன் பலனையடைய உத் தேசித்தல்ல.

3-வது வாரம்:—சோம்பல் தவிர்க்கப்படவேண்டும். நற்காரியத்தில் சுறுசுறுப்புடன் உழைக்கவேண்டும்.

விவேகியானவன் தன் சரீரத்தைப் பார்த்து "நற்பணி செய்ய நீ தடைசெய்யாதே," என்று மறுமொழி சொல் கிறான்.

4-வது வாரம்:—குருநாதனுக்கு நீ சொந்தமாக வேண்டு வாயாகில், சாதாரணமான காரியங்களை மற்றவர்களைவிட நீ மேலாகவே செய்யவேண்டும். சிரத்தைக் குறைவாய்ச் செய்யலாகாது ஏனென்றால் அவைகளையுங்கூட நீ குருநா தனுடைய நிமித்தமாகவே செய்யவேண்டும்.

ஸ்வலாப நோக்கமற்ற எந்த பரோபகாரச் செயலும் குருநாதனுடையதே; அதை நீ அவர் நிமித்தம் செய்ய வேண்டும்.

5-வது வாரம்:—எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன்மனதை நிறுத்து. அப்பொழுது அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்.

## தினசரி அப்பியாசம்.

1. உலகம் நல்லதென்று சொல்லும் ஒரு பெருங்காரியத்தைவிட குருநாதனது பிரவிர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறிய காரியம் மிகவும் மேன்மையானதென்றறிக.

2 உன் முன்னிலையில் நீ ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய முக்கியதர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்தலேயாம்.

3. குருநாதனது உபதேசங்களில் அவர் சொல்லும் ஒவ்வொரு குறிப்பையும் ஒவ்வொரு வார்த்தையையும் கிரகித்து, நீ அதன்படியே நடக்கவேண்டும்.

4. நீதியெதுவோ அது உன்னால் எவ்வகையிலும் செய்யப்படவேண்டும்; அநீதி எவ்வகையிலும் விடப்படவேண்டும்; இவ்விஷயத்தில், அறியாதவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத் தக்கதல்ல.

5. செய்யத் தகுதியுள்ளது இது என்பதைத் தெரிந்துக்கொள்ள முயலு. நீ கவனிக்கவேண்டியது, காரியம் பெரிது, சிறிது என்பதல்ல.

6 ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை தங்கிய உபகாரமாகும். அது நற்காரியந்தான். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்

'களை விருத்திக்குக் கொண்டுவருவது மிக்க உபயோகமுள்ள மேலானகாரியம். பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உண வளிக்கக்கூடும். ஆனால் ஞானமுள்ளவர்கள்தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

7. ஈசுவரன் ஒருவர் தான் பெரியவர். அவரால் தான் எல்லா நற்காரியங்களும் செய்யப்படுகின்றன, என்று விவேகியறிகிறான்.

8. நியாயத்தை உத்தேசித்தே நீ நியாயமாய் நடக்க வேண்டும். அதினால் வரும் வெகுமானத்தை யுத்தேசித் தல்ல.

9. நீ வேலை செய்யவேண்டுவது வேலையை உத்தேசி த்தேயல்லாது அதன் பலனைப் பார்க்க உத்தேசித்தல்ல.

10. உலகத்தின்கண் உனக்கு அன்பிருக்குங்காரணத் தால் உன்னை நீ அதற்கே அர்ப்பணம் செய்துகொண்டு உலக கைங்கரியங்களில் நீ முயலவேண்டும்.

11. ஒருதரம் ஒரு மனிதன் [ஈசுவரன் மனிதர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் விகாஸ முறையை] உண்மையாக அறிந்துகொண்டால், அது மிகவும் சிறப்புற்று மகிமை தங்கி நிற்பதால், அவன் அதற்கு இணங்க நடவாமலும் அதனுடன் ஒருமைப்படாமலும் இருக்க முடியாது. ஆகை யால் அவன அறிவுபெற்று ஈசுவரன் வழியே நின்று, நன் மை புரிந்து தீமையை விலக்கி, விகாஸ முறைக்கு இணங்க நடந்து, ஸ்வலாப நோக்கத்தை விடுகிறான்.

12 அநேக ஜனங்களுக்குத் தங்கள் சொந்தக் காரிய ங்களை மாத்திரம் கவனித்து நடக்கப் பயிலுவது உலகில்

மிகவும் கஷ்டமான விஷயமாயிருக்கின்றது. அதனால் இதைத்தான் நீ நன்றாய்க் கவனித்து நடக்கவேண்டும்.

13. அடியில் கண்ட விதமாய் நீ உன்னைச் சற்று யோசனையின்மையால் கொடுஞ் செயல்களுக்குட்படுத்திக்கொள்ளாது, ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்

(1) கவனியாது சொல்லும் வார்த்தை

(2) வேலைக்காரனுக்குச் சம்பளம் கொடுப்பதில் கிருபணத்தனம்.

(3) தன்னுடைய சொற்பசொந்திரவை யுத்தேசித்து தன்னுடைய வேலையாட்களுக்குக் குறித்த தினததில் சம்பளங்கொடுக்கிறதில்லை. அவர்களுக்குத் தன்னாலுண்டாகும் கஷ்டங்களையும் நினைக்கிறதில்லை.

14. வேண்டுமென்றே வேறு ஒரு ஜீவ ஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச் செய்யும் கொடுஞ்செயலாம். இது மனுஷப்பிவர்த்தியல்ல அசுரச் செய்கை, எல்லாப்பாபங்களிலும் இது பெரிது. உடற்கூறு சாஸ்திர பரீக்ஷகர்கள் இதைச் செய்கிறார்கள். அநேக பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். வெளியிற் சென்று, வேட்டை விளையாட்டென்று சொல்லி, புத்திபூர்வமாய், ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்பவர்களின் கதியும்; கொடுமை செய்பவர்களுடைய கதியும் ஒன்றே. ஒருவனை மந வருத்தமுறச் செய்யும்படி பேசுவதும் இந்தக் குற்றத்திற் சம்பந்தப்பட்டதுதான்.

15. கோபத்தை நீக்கிவிடு. நற்காரியத்தில் இடைவிடா ... யிருக்கவேண்டும்.

16. பிறர்க்குதவி செய்யச் சமயம் நேரிட்டால் "இது என்ன உபத்திரவம், வேறு யாராவது செய்யட்டும்" என்று சரீரம் பலவீதமாய் நினைக்கின்றது. நற்பணி செய்ய நீ தடை புரியாதே என்று விவேகியானவன் சரீரத்தைப்பார்த்துக் கண்டிக்கிறான்.

17. சரீரம் ஒரு மிருகம் போன்றது. நீ சவாரி செய்யும் குதிரை ஆதலின், அதை நன்கு கவனித்து நடத்தி மிதமிஞ்சியவேலைக்குட்படுத்தாது, சரியான அன்னபானாதிகளால் சரிவரப்போஷித்து கொஞ்சமும் அழுக்கற்ற ஸ்திதியில் அதை எப்போதும் நீ வைக்கவேண்டும்.

18. முற்றிலும் சுசியாயும், ஆரோக்கியமாயும் சரீரமிருந்தால்தான், மேன்மார்க்கத்துக்குரிய, கஷ்டநிஷ்டூரங்களுக்கிணங்க நடக்கவும், அம்மார்க்கத்திற்குரிய இடையறாத உழைப்பைச் சகிக்கவும் முடியும்.

19. ஆகையால சரீரம் உனக்கு உட்பட்டிருக்கவேண்டுமேயல்லாது, அதன் வசம் நீ யிருப்பது கூடாது.

20. ஸ்வதர்மம் தான் உனக்கு பெரிது. உன் சொந்தக்கடமையையே நீ முதன்மையாகச் செய்யவேண்டும். மற்றவர் உன்னை வேண்டினால், அவருக்கு நீ உதவிசெய்யும் பொருட்டு, அவரது பிரவிர்த்தியில் உழைக்கலாம்.

21. ஒவ்வொரு மனிதனையும் அவன் வழியிலேயே அவன் சொந்த வேலையைச் செய்யும்படி விடு. அவசியம் நேரிடும் சமயத்தில், நீ உதவி செய்ய எப்பொழுதும் தயாராக இரு. ஒருபொழுதும் இதாருடைய காரியங்களில் தலையிடாதே.

22. குருநாதனுக்கு நீ சொந்தமாக வேண்டுவாயானால் ஸாதாரணமான காரியங்களை மற்றவர்களைவிட மேலாகவே செய்யவேண்டும். சிரத்தைக் குறைவாய்ச் செய்யலாகாது ஏனென்றால், அவைகளையுங்கூட நீ குருநாதனின் நிமித்தமே செய்யவேண்டும். ஸ்வலாப நோக்கமற்ற எந்த பரோபகார வேலையும் குருநாதனுடையதே. அதை நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

23. உயர்வான வேலையை நீ செய்ய முயலுகிற காரணத்தினாலேயே, உனது சாதாரண கடமைகளை நீ மறக்கக்கூடாது. இவைகள் செய்யப்படாவிட்டால், வேறு கைங்கரியத்துக்கு நீ சுதந்தரனல்லன்.

24. புதிதாய் நீ ஒரு பிரபஞ்சப் பிரவர்த்தியையும் ஆரம்பிக்க ஏற்கவேண்டாம். நீ ஏற்றுக்கொண்டு முடிக்கக் கடன் பட்டிருக்கிற நியாயமான கடமைகளை நீ பூர்ணமாய் நிறைவேற்றவேண்டும். பிறர் பலர் உன்னைப் பலவிதமாய் அவரவர் போக்குப்படி ஏவும வேலைகளையெல்லாம் இரண்டாம் பக்ஷமாகவே கருதுவாயாக.

25. எதைக் குருநாதன் செய்யமாட்டாரென்று நினைக்கிறாயோ அதை நீ ஒருபொழுதும் செய்யக்கூடாது.

26. கல்வியைப் பொறுமையுடன் அடை, இதர மனிதர்கள் உன்னை விவேகிஎன்று நினைப்பதற்காகவல்ல; விவேகியென்று நீயே அறிந்து ஆனந்தப்படுவதற்காகவுமல்ல. விவேகிதான் ஆராய்ந்து விவேகத்துடன் உதவி புரியக்கூடும். நீ எவ்வளவு உதவிபுரிய விரும்பினும், விவேகக்குறைவால் உனது செய்கைகளில் நன்மை குறைந்து தீமை மேலிடும்.

27. செய்கையில் உண்மையாயிரு; வேஷம் போடாதே; சுத்தமான கண்ணாடியின் வழியே சூரியப் பிரகாசம் துலங்குவதுபோல் சுத்த சத்தியப் பிரகாசம் உன் வழியே பிரதி பலிக்கவேண்டும். வேஷ அபிநயமெல்லாம் இதற்கு விரோதம்.

28. இப்பொழுது நீ செய்யும் செய்கைகளைக் கவனி. இவைகள் உனது அடுத்த ஜன்மத்திற் பலனைக் கொடுக்கக் கூடியவைகள்; அவைகளை நீ மாற்ற முடியும்.

29. எந்தக்காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும் அதிலேயே உன் மனதை நிறுத்து. அப்பொழுது அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்.

30. நீ எவ்வற்ப வேலையைச் செய்யும் பொழுதும் அதில் உனது கவனம் முழுமையையும் செலுத்திச் செய்; எவ்வளவு நன்றாய்ச்செய்ய உன்னால் முடியுமோ அவ்வளவு நன்றாய் அது செய்யப்படவேண்டும்.

31. குருநாதன் பார்க்க உடனே வருவதாக நீ அறிந்தால், ஒரு வேலையை நீ எப்படிச் செய்வாயென்பதை ஆலோசி; நீ செய்யும் எல்லா வேலைகளையும், இவ்விதம் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

# தியானக்கிரம விஷயம்.

## நவம்பர் மாசம்.

---

### மாதாந்திர அப்பியாசம்:—பிறருக்கு உதவிசெய்.

### வாரப்பியாசம்.

1-வது வாரம்:—சாரமில்லாத விஷயங்களில் எப்பொழுதும் நீ தலையிட்டுக்கொள்ளாதே. வீண் விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும், பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவுமிருக்கவேண்டும். நீ ஸ்வேச்சையாயிருக்க விரும்புகிறபடி மற்றவர்களுக்கும் இடங்கொடு.

2-வது வாரம்:—உனக்கு தெரிந்த விஷயத்தை மற்றவர்கள் அறியும்படி செய்வது உனது கடமை.

3-வது வாரம்:—நாளடைவில், தன்னயம் சிறிதும் கருதாமல், பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்கிற எண்ணம் உன்னிடத்தில் பூர்த்தியாயேற்படும்.

4-வது வாரம்:—பரோபகாரம் செய்யவேண்டுமானால் எல்லோரையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்,

5-வது வாரம்:—உன் சகோதரனிடத்தில் உள்ள ஈசுவராம்சத்தை எவ்விதம் வெளிப்படுத்தக்கூடும் என்பதை நீ கற்றுக்கொள். அவனிடம் இருக்கும் ஈசுவராம்சத்தை அவன் தெரிந்துகொள்ள எவ்விதம் செய்யவேண்டுமென்பதை நீ அறிந்துகொள். அப்படியானால், உன் சகோதரன் துன்மார்க்கத்தில் செல்லாதபடி நீ அவனைத் தப்புவிப்பாய்.

## தினசரி அப்பியாசம்.

1. குருநாதன் செய்த உபதேசம் நமக்கு உதவியாக விருப்பதுபோல், பிறருக்கும் அவ்வுபதேசம் உபகாரமாக வேண்டுமென்று இச்சித்தல் வேண்டும்.

2 என் குருநாதன் எனக்குச் செய்த உபதேசத்தின் படி நீ நடந்தால் அந்த உபதேசம் உனக்கும் அனுகூலமாயிருக்கும்.

3 பிறருக்கு உதவி செய்ய சமயம் வாய்த்த காலத்தில், ஸ்தூல சரீரமானது அப்படி உதவிசெய்வது தொந்திரவென்று உணர்ந்து. வேறு யாரேனும் செய்யலாமேயென்று சொல்லுமானால், உன்னிடமிருக்கும் ஜீவாத்மா நல்ல காரியம் செய்வதில் என்னைத் தடை செய்யாதேயென்று மறுமொழி சொல்லவேண்டும்.

4. உன்னுடைய மானஸிக சரீரம், குருநாதனுடைய வேலையைப்பற்றியும், பிறருக்குதவி செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், நினைக்காமல், சுய அபிவிருத்தியைப்பற்றித் தன்னலம் பாராட்டுகிறது.

5. சாரமில்லாத விஷயங்களில் எப்பொழுதும் நீ தலையிட்டுக்கொள்ளாதே. வீண் விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும், பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவுமிருக்கவேண்டும். நீ சுயேச்சையாயிருக்க விரும்புகிறபடி மற்றவர்களுக்கும் இடங்கொடு.

6. உனக்குத் தெரிந்த விஷயத்தை மற்றவர்கள் அறியும்படி செய்வது உனது கடமை.

7. பிறருக்குதவிசெய்ய எது உனக்கு அதிக சாதகமாக இருக்குமோ அதைப்படி பொறுமையுடனும் சிரத்தையுடனும் படி. பிறர் உன்னைப் புத்திசாலி யென்று மதிக்கவேண்டுமென்றும், நீ புத்திசாலியென்று நினைத்து அகப்பாவம் கொள்ளும்படிக்குள், நீ படிக்காதே ஏனென்றால் புத்திமானை புத்திசாலித்தனமாக உதவி புரிவான.

8. மற்றவர்கள் விஷயத்தில் உன்னுடைய எண்ணங்கள் ஸண்மையுள்ளவைகளாக விருக்கவேண்டும். அவர்கள் விஷயம் உனக்குத்தெரியாத பாவத்தைப்பற்றி நீ நினைக்கக்கூடாது.

9. நாளடைவில் தன்னயம் சிறிதும் கருதாமல் பிறருக்குதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் இனளிடத்தில் பூர்த்தியாய் ஏற்படும்.

10. நீயும் உன் சகோதரனும் எதில் ஒத்துக்கொள்ளக்கூடுமோ, அதுமூலமாய் நீ உன் ஸகோதரனுக்குக்குதவி செய்யலாம். அதுதான் ஈசுவராம்சம் அதை அவனிடத்தில் மலரச் செய்வாயாக. அதை அவன் தெரிந்து கொள்ளும்படி செயயப் பிரயத்தனப்படு. அப்படியானால் உன் சகோதரன் துன்மார்க்கத்தில் செல்லாதபடி நீ தப்பிவிப்பாய்

11. நீ யாருக்காவது உதவி செய்தால், எவ்வளவுமட்டில் அவனுக்கு நீ உதவி செய்திருக்கிறாய் எனபதைப் பார்க்க இச்சிக்கிறாய். சிலவேளைகளில் அவன் அதை உணர்ந்து உனக்கு அதற்காக நன்றியறிவுள்ளவனு யிருக்கவேண்டுமென்றும் நீ இச்சிக்கிறாய். இதுவும் ஓர்வித இச்சைதான். அத்துடன் அவநம்பிக்கையையும் காட்டுகிறது. மனப்பூர்வமாக ஒருவனுக்கு நீ உதவிபுரிந்தால் அதற்குஒரு பலன் உண்டாகவேண்டும். அவ்விதபலன் நீ கவனித்தா

னும் கவனிக்காவிட்டாலும் உண்டாகும். உலகத்தை நேசிப்பதால் உலகத்தார் கைங்கரியத்தில் உன்னை அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டும். உன்னை அந்த கைங்கர்யத்துக்குத் தியாகம் செய்துகொள்ளாமலிருக்கமுடியாது.

12. சித்திகள் பெறுவதற்கு இச்சைப்படாதே. அவைகளை அடையச் செலவழிக்கும் காலத்தையும் பலத்தையும் மற்றவர்களுக்கு உழைப்பதில் செலவிடலாம். சாரமில்லாத விஷயங்களில எப்பொழுதும் தலையிட்டுக்கொள்ளாதே. வீண் விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும். பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவு மிரு. மற்றவர்களுக்கும் இடங்கொடு.

13. சொற்பமாய்ப் பேசுவது நலம். நீ சொல்ல விரும்புகிற விஷயம் உண்மையாயும் பக்ஷமுள்ளதாயும் உபகாரார்த்தமாகவும் இருக்குமென்று நீ நிச்சயமாயறியாதவரை ஒன்றும் பேசாமலிருப்பது நலம்.

14. எப்பொழுதும் விசனத்துக்கும் மனத்தளர்ச்சிக்கும் இடம் கொடுக்காதே. மனத்தளர்ச்சி பிசகானது உன்னுடைய மனத்தளர்ச்சியானது மற்றவர்களைத் தாக்கி அவர்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. அவ்விதம் செய்ய உனக்கு பாத்தியதை யில்லை.

15. துன்பங்கள், வருத்தங்களுக்குட்பட்டு பிறர் உதவியை வேண்டுகிறதாக நீ அறியும் எவரையாவது ஒருவரைப்பற்றித் தினசரி நினைத்து உன்னுடைய அன்பு நிறைந்த எண்ணங்களை அவரிடம் செலுத்து.

16. எல்லோரையும் அவரவர் இஷ்டப்படி காரியங்களைச்செய்யும்படி விடு. ஆனால் உன் உதவியை அபேக்ஷிக்கும் காலத்தில் உதவி செய்யத் தயாராயிரு. ஒரு போதும் பிறர் காரியத்தில் தலையிடாதே.

17. மனித வர்க்கத்திற்குதவிபுரிய வேண்டுமானால் எண்ணமானது செய்கையில்முடிவுபெறவேண்டும். சோம்பலாயிருக்கக்கூடாது. எப்போதும் நற் காரியத்தில் முயற்சியிருக்கவேண்டும். எப்பொழுதும் உன்னுடைய கடமையை நீ செய்யவேண்டும். மற்றொருவன் அனுமதியினபேரில் மட்டும் அவனுக்குதவிபுரியும்பொருட்டு அவன் காரியத்தில் நீ பிரவேசிக்கலாமே தவிர மற்ற வேலைகளில் பிரவேசிக்கக் கூடாது.

18. உன்னுடைய மதக் கோட்பாடுகளில் நீ எவ்வளவு அபிமானமுள்ளவனாயிருப்பாயோ, ஏனைய மதங்களின் விஷயத்திலும் அவ்வளவு அபிமானமுள்ளவனாயிரு. எந்த உன்னதமான பதவிக்கு உன் மதம் ஒருமார்க்கமாயிருக்கிறதோ, அப்படித்தான் அந்த மதமும் மார்க்கம். பரோபகாரம் செய்யவேண்டியானால் நீ எல்லோரையும் அறிந்து கொள்ளவேண்டும்.

19. இப்பொழுது உன் கண் திறக்கப்பட்டபடியால் முன் நீ அநுசரித்துவந்த மத சம்பந்தமான கொள்கைகளும் சடங்குகளும் உனக்கு அநாவசியமாய்த் தோன்றும். ஆயினும், அவைகள் வேறு சிலருக்கு உபயோகமாயிருக்கும். ஆகையால் அவர்களின் பொருட்டு நீ அவைகளை நன்கு மதிக்கவேண்டும், நிந்திக்கலாகாது.

20. தன்னுடைய குழந்தைப் பருவத்தை மறந்து குழந்தைகள் விஷயத்தில் அன்பில்லாதவன், குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவாவது, அவர்களுக் குதவிபுரியவாவது அருகனல்லன். ஆகையால் எல்லாரிடத்திலும் பக்ஷமாயும் அன்பாயும் வித்தியாசமின்றியும் எல்லோரையும் சமமாகக் கருது.

21. உனக்குத் துன்பம் வருவதைக் கௌரவமாக நினைத்து உன் கர்ம பலன் எனனவிதமாயிருந்தாலும், அதை நீ

னுடைய கெட்ட கர்மத்தின் பலன்கள் அநுபவிக்கப்பட்டு நீ கர்மபந்தமற்றுப் போனுலொழிய நீ குருநாதனுக்கு பிரயோசனப்படமாட்டாய்.

22. நீ சொத்தில் ஆசையைத் தவிர்த்து விடு. நீ எந்த வஸ்துக்களை அதிகமாக விரும்புகிறயோ அவைகளை கர்மா உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளும். நீ நிரம்பவும் நேசிக்கும் மனிதர்களைக்கூட உன்னிடமிருந்து அபகரிக்கும். அப்பொழுதுகூட நீ சந்தோஷமுள்ளவனுயிருக்கவேண்டும். எல்லாவற்றையும் தியாகஞ்செய்துவிடத் தயாராயிரு. குருநாதர் தமது சக்தியானது தமது சீஷன மூலமாய் மற்றவர்களை அடையும்படி செய்ய அடிக்கடி நேரிடும். சீஷன் மனத்தளர்ச்சிக்குட்படுவானுனல், அவர் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்பொழுதும் சந்தோஷத்துடனிருக்க வேண்டும். இதுவே உன் முகய நியமமாயிருத்தல் வேண்டும்.

23. உபகாரமுள்ளதும், சுயநயமற்றதுமான வேலை எல்லாம் குருநாதன் வேலை. ஆகையால் அத்தகைய வேலையை நீ குருநாதனுக்காகச் செய்யவேண்டும்

24. உனக்கு குருநாதனிடம் திடமான நம்பிக்கையிருக்கவேண்டும். இல்லாவிட்டால் குருநாதனும் உனக்குதவி புரிய முடியாது. பூர்ண நம்பிக்கையில்லாவிட்டால் அவரது அன்பும் சக்தியும் உன் வழியே தடையின்றி வாராது.

25. "அன்பே சிவம்." அன்பே உருவெடுத்தவர் ஈசுவரன். நீ ஈசுவரனுடன் ஐக்கியமாக இச்சிக்கும் பக்ஷத்தில் கிஞ்சித்தும் சுயநயமின்றி பூர்ண அன்பு உன்னிடம் நிறைந்திருக்க வேண்டும்.

26. எப்பொழுதும் பிறருக்குதவி செய்யச் சமயம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

27. ஒவ்வொரு ஜீவராசியினிடமும், வஸ்துவினிடமும், நன்மையிருக்கிறது. அவ்விதம் தீமையுமிருக்கிறது. இவைகளில் எதையாவது சிந்தித்துப்பலப்படுத்தலாம். அதனால் ஒருவன் விருத்தி யடையும்படி உதவலாம். விருத்தியாக வொட்டாமல் தடுக்கலாம். ஈசுவர ஸங்கல்பத்தின் வழிபடலாம் அல்லது அவரை எதிர்க்கலாம்.

28. அஜாக்கிரதையினால் விளையும் துன்பம் அதிகம்.—அதாவது ஒரு செய்கையினால மற்றவர்கள் எவ்விதம் பாதிக்கப் படுவார்கள் என்ற விஷயத்தைப்பற்றி நினைக்கத் தவறுவதேயாகும்.

29. நன்மை செய்வதிலேயே தீவிரமுள்ளவனாயிரு. பிறருக்கு கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற இச்சையானது உன்னிடம் பூர்த்தியாயிருக்க வேண்டும். உன்னைச் சுற்றிலும் உள்ள, மனிதர்கள் மாத்திரமல்ல, பிராணிகள், புற் பூண்டுகளுக்கும் உதவி செய்யச் சமயம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நீ ஈசுவரனையடைய இச்சிக்கும் பக்ஷத்தில் அது உன்னுடைய சுயநலத்துக்காக அல்ல; ஈசுவரனின் அன்பு மற்றவர்களைப்போய் அடைய நீ கருவியாயமைய வேண்டுவதற்கேயாம்.

30. நிவர்த்தி மார்க்கத்தில் இருக்கிற ஒருவன் தனக்காக ஜீவிக்க மாட்டான், பிறருக்காக ஜீவிக்கிறான். மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்யும் நிமித்தம் தன்னை மறந்து விடுகிறான். இவனுடைய ஹிருதயத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் ஈசுவரகிருபையானது உலகத்தில் பிரகாசிக்கும்படி செய்ய இவனொரு ஜோதியாயிருக்கிறான்.

பிறருக்குதவி செய்யும்படி உன்னைத் தூண்டச் சாதகமாயிருக்கும் ஞானத்தை நீ எவ்வழியாய் அடைந்தனையோ அவ்வழியை உலகத்தில பரவச செய்வாயாக.

# தியானக்கிரம விஷயம்.

## டிசம்பர் மாசம்.

[சமீபகாலத்தில் ஒரு அவதார புருஷனை அநேகர் எதிர்பார்ப்பதில், அதுவிஷயமாக இந்த மாச அப்பியாசம் ஏற்படுவதால், முன் அவர் கிருஷ்ணபகவான், கௌதமபுத்தர், இயேசுகிருஸ்து நாதர் இவர்களாக அவதாரம் செய்த காலத்திலுண்டான சில விஷயங்கள் இப்பொழுது ஞாபகத்தில் உதிக்குமாறு அடியில் விவரிக்கப் பட்டிருக்கிறது.]

மாசாந்தர அப்பியாசம் :—ஜகத்குருவை எதிர்பார்த்து அவர் திருவரவிற்கேற்ற ஆயத்தம்செய்.

### வார அப்பியாசம்.

1-வது வாரம்:—உன் நாதன் எப்பொழுது வருவாரென்று உனக்குத் தெரியாதாகையால் அவர் வரவை எப்போதும் எதிர்பார்த்தவண்ணம் இரு. (மத்தேயு XXIV—42) இல்லாவிடில் அவர் சடிதியில் வரும்போது, விழித்திராமல் நீ தூங்கிக்கொண்டிருப்பாய். (மார்க்கு XIII—36.) நீ எதிர் பார்க்கும் பிரபு திடீரென்று அவர் ஆலயத்துக்கு வருவார். (மலாச்சி III—1).

2-வது வாரம்:—நமது பிரபுவின் வருகைக்கு நேரான ஒரு பெரிய ராஜபாட்டையாக இப்போதுள்ள பாலைவனத்தில சீர்திருத்தம்செய். (ஈசாயா XL—3) ஓ! புண்ய க்ஷேத்ரமாகிய ஜெருஸலேமே! யூதேயா தேசத்துப் பட்டணங்களில் சிறந்த ஜெருஸலேமே! உன் உரத்த சப்தத்தால் ஈசுவரனுடைய திருவரவை எந்நாட்டிலும் பிரபலப்படுத்தி உத்கோஷிப்பாயாக. பரமாசார்யன் திருவரவைப் பஹிரங்கப் படுத்தக் கூசாதே, பயப்படாதே. (ஈசாயா XL—9)

3-வது வாரம:—ஆசையால தயாராயிருங்கள். நீங்கள் நினையாத வேளையில் பிரபு வருவார். (லூக்கா XII-40)

அப்படியானால் சீக்கிரம் வாருங்கள் என்று நான் சொல்ல வேண்டுமே யல்லாமல், நான் என் ஆடைகளைச் சுத்தப் படுத்தி உடுத்திக் கொள்ளும் வரை காத்திரும் என்று சொல்லமுடியாது போலிருக்கிறதே.

4-வது வாரம்:—ஜகத்குருவாகிய அரசனை அவரது பூரண அழகோடு, காண்பாய். (ஏசாயா XXXIII, 17)

இப்பெரிய அரசர் பரமசாந்தராய் ஒரு கோவேறு கழுதையின்மீது ஏறிகொண்டு உனனிடத்துக்கு வருவார். (மத்தேயு XXI, 5)

பரமர் வருந்தருணத்தில் விழிப்போடு காத்திருக்கும் ஊழியர்கள் அவரதநுக்ரஹத்தைப் பெறுகிறார்கள். அவர்களே உண்மை ஊழியாகளாவார்கள். (லூக்கா XII-37-38)

5-வது வாரம்:—பக்தியும், மகஉறுதியும், சாந்தமும் நம்முடைய தினசரி நடக்கையில் முககிய அம்சங்களாக அமையும்படி. முயற்சிப்போமாக. (உதயதிசை நக்ஷத்திர சங்கம)

ஒரு ஆட்டிடையன் போல், அவர் தம்மைச் சரணமடைந்தோரை ரக்ஷிப்பார். தம மந்தை யாடுகளைக் கையால் தூக்கி, மார்போடணைத்துச் சுமந்து செலவார். (ஏசாயா XL, 11)

## தினசரி அப்பியாசம்.

(1) பரமாசாரியர் திடீரென்று வரக்கூடுமாகையால் அப்பொழுது அவர் நீ தூங்குவதைப் பாராதபடி விழித்திரு. (மார்க்கு XIII—36)

நீ தேடுகிற பிரபு திடீரென்று அவரது கோவிலுக்கு வருவார். (மலர்ச்சி III—1)

(2) .உயர்வற உயர் நலம் அமைந்த உம்முடைய வாக்கிலிருந்து வெளிப்படும் ஞானமொழி ஒவ்வொன்றும் எல்லா திசைகளிலும் பரவி எல்லா வஸ்துக்களையும் மிகுந்த

பல பராக்ரமத்துடன் இனிய நல் வழியிலேயே நேர்மையாய் நடத்துகிறது. ஹே! பரமகுருவே! எங்களுக்கு ஞான வழியைக் காட்டியருளும். (ரோமன் ப்ரிவியரி)

(3) தர்மம் அழிந்தும், அதர்மம் மேலிட்டும் வருகிற காலத்தில் நானே அவதாரம் செய்கிறேன். (பகவத் கீதை IV—7)

(4) பகவான் புத்தர் சொன்னதாவது:—இந்த பூமிக்கு வந்த முதலாவது புத்தர் நானல்ல. நான் தான் கடைசியாய் வந்திருக்கிறவரென்பதுமல்ல. இனிவருங்காலத்தில் அதற்குரிய வேறொரு புத்தர் வருவார். நான் உங்களுக்கு கற்பித்த நித்தியமான உண்மைகளையே, அவரும் வந்து எடுத்துரைப்பார்! (புத்தருடைய உபதேசம்)

(5) கடவுளுக்குத் தமது தூதனை அனுப்பப் படவேண்டியவர் யாரெனறும், எத்தனைபேரென்றும நன்றாய்த் தெரியும். (கொரான்)

(6) நல்லவர்களை ரக்ஷிப்பதற்காகவும் கெட்ட சுபாவமுள்ளவர்களை (கெட்ட செய்கையுள்ளவர்களை) அழிக்கவும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காகவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன். (பகவத்கீதை IV-8)

(7) நீ ஈசுவரனின் திருவருளைப் பெறுவாய். அவருடைய, அளவிறந்த சக்தியால், நீயும சக்திமானவாய். (லூக்கா I, 35)

ஒளியானது இருளிலேயும் பிரகாசிக்கிறது. இருளானது அதைத் தெரிந்து கொள்ள வில்லை. (ஜான் I, 5)

(8) ஜகத்குருவின் வருகைக்கு, அவர் வழியைச்சீர்ப்படுத்துங்கள். அவருக்கு வழியை நேர்மைப் படுத்துங்கள். (மத்தேயு III; 3 R V.)

நற்செய்திகளைக் கூறினவருடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாக இருக்கின்றன. (ஈசாயா iii—7)

"இதோ கடவுள்," என்று சத்தமிட்டுப் பிரஸ்தாபப் படுத்து. பயமும், கூச்சமும் வேண்டாம். உன் முழுப் பலத்தோடும் கோஷிப்பாயாக. (XL—9)

(9) என்னுடைய ஈசுவரத் தன்மையை அறியாமல், நான் மானிட வேடம்பூண்டிருப்பதை வைத்து மூடர்கள் என்னை அவமதிக்கிறார்கள். (பகவதகீதை IX—11)

(10) இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். (லூக்கா X—21)

(11) வெளவால் சூரியப் பிரகாசத்தில் வர இயலாவிட்டால், சூரியன் ஒளியற்றவரென்று சொல்லலாமா? (ஸாதி)

(12) நம்முடைய ஜகத்பிதா நம்மை அவரிடத்து நிலை பெற்றிருக்க வேண்டுகிறாரே தவிர வெறும் புஸ்தகத்தை மட்டும் வாசித்து பாண்டித்யம் பெறுவதற்கல்ல. (வில் பெர்போர்ஸ்)

வேத வாக்கியங்களைப் படித்து விடுவதால் நீங்கள் நித்ய வாழ்க்கையை யடைந்து விடலாமென்று எண்ணுகிறீர்களே யொழிய நித்ய வாழ்க்கையை என் மூலமாயல்லாமல் பெற முடியாதென்பதை உணர்க்கிறீர்களில்லை. (ஜான் (V—39 R. V.)

(13) பகவான் புத்தர், மைத்ரேயர்" என்றழைக்கப் பெறுவர். மைத்ரேயர் என்றால் "பக்ஷமுள்ளவர்" என்று அர்த்தம். (புத்தர் உபதேசம்).

(14) ஓர் ஆட்டிடையன்போல் தம்மைச்சரணமடைந்தோரைப் போஷித்தும், ரக்ஷித்தும் பாதுகாத்தும்

அவர் தம் மந்தை ஆடுகளைக் கரத்தால் எடுத்து மார்போடணைத்துச் சுமந்துசென்று, கறவை ஆடுகளைக் குட்டிகளுடன மெதுவாய நடத்துவார். (ஏசையா 40-11.)

(15) நீங்கள், நினையாத நேரத்தில் அவதார புருஷர் வருவாராகையால நீங்கள் ஆயத்தமாயிருங்கள்.

(16) இராக்காலத்தில நீ எதிர்பாராத சமயத்தில் தன் கருத்தைய குறியாகக்கொண்டு வரும் திருடனைப் போல, அவதார புருஷரும் அவரது உயர்ந்த கருத்தைத் நிறைவேற்றுதற் பொருட்டு உலகருக்குள் தோன்றுவார். முற்காலத்திலும் இவ்விதமே நடந்திருக்கிறது. வருங்காலத்திலும இவ்விதமே நடக்கும். (லட்மார்டி கார்பெண்டர்)

(17) மேகமண்டலத்திலிருந்து திடீரென்று மிகுந்த ஜோதிர்மயமான பெரிய காட்சியுடன் பரமாசார்யர் வருவாரென்று நாம் எதிர்பார்க்கிறோம ஆனல் நாம் அவரை எளிதில் கண்ணெறிட்டுப் பார்க்கும்படியாக, தம்முடைய அளவிறந்த தேஜஸை, இக்காலவுலகிற்கேற்ப மட்டுப் படுத்திக்கொண்டுதான் வருவார் (ஸநாதந ஞானமார்க்கம்.)

(18) என்னிடத்தில் பூர்ணமான ஸமாதானம் ஏற்பட்டால் மட்டும் உமமுடைய வரவு அறியப்படும. (கவெண்ட்ரீ பாட்மோர்)

(19) அஞ்ஞானத்தில் மூழ்கிப் பலம் குன்றிய அன்பனே! நீ தேடுகிறவர் நான் தான். நீ அன்புசெலுத்திய க்ஷணமே நான் விரைந்தோடி வந்து விட்டேன். (பரலோக கோஷம்)

(20) உன் முன்பாக விருக்கும் என்னைப் போலவே வரப்போகும் பரமாசார்யரும் ஓர் மனிதனுகவே தோன்றுவார். அவரும் கை, கால், முகம் முதலியவைகளோடு கூடிய

மனிதரே யாவர். உன் சொற்ப அன்பிற்கு ஈடாக, என்றென்றைக்கும் சாசுவதமான அவரது பேரன்பைப் பெறுவாய். அவர் முகமலர்ச்சி தான் இவ்விதமென்றால், அவர் திருக்கரங்களோ, நித்யவாழ்வை யடைதற்கேற்ற, புதிய மார்க்கத்தில் நீ ப்ரவேசிக்குமாறு, மூடிய கதவுகளைத் திறந்துவைக்கும் இயல்பினவன்றோ.

(21) எப்பொழுது உலகமுழுதும் பாபத்திலேயே உழன்று வருகிறதோ, அப்போதுதான் பரமாசார்யர் தோன்றுகிறார். அவர் தங்குவதற்கு நல்ல இடங்கொடாமல் மிலேச்சனை அநயனைபபோல், பிறவியிலேயே தாழ்மை என்னும் குணம நிறைந்து, மாட்டுக் கொட்டகையில் பிறந்த மஹா புருஷரை, நாமும் நேரே அறிந்து கொள்ளாமல் மாட்டுக்கொட்டத்தில் வரவேற்று உபசரிக்கிறோம். இவ் விதமின்றி அவரைத் தெரிந்து கொள்ளும தகைமையைப் பெற வேண்டும.

(22) நீஙகள் இப்போது பிரத்யக்ஷமாய்ப் பார்க்கும் பரிசுத்தமான விஷயங்களைக் காணும் கண்களே கண்கள். ஏனெனில் தற்காலம் அததகைய சுபசூசகமான காலம். அநேக ரிஷிகளும், அரசர்களும் இந்தற் காலததில் ஜனமமெடுத்து, நீங்கள் பார்த்தும கேட்டும் வருகிற விஷயங்களைப் பார்க்கவும் கேட்கவும் பிரியங்கொண்டுளார். (லூக்கா, X அத்-23)

(23) ஒரு பெரும் வெள்ளம் வருகையில் சிறு ஓடைகளும் பள்ளங்களும் தாமாகவே நிரம்பிவிடுகின்றன. அதே மாதிரியாக ஒரு அவதார புருஷர் வரும் காலத்தில் ஞான வெள்ளமானது உலகத்தில் பரவி அவர் ஸந்நிதி மாத்ரத்தில் ஞானத்தை யடைகிறார்கள். (ஸ்ரீராம கிருஷ்ண)

(24) இதுதான குறிப்பிட்ட காலம்! சவனி !! இது தான் முக்தியளிக்கும் காலமுமாகும். (II கொரிந்தியர் கள் ii, 2)

(25) சிருஷ்டி கர்த்தாவாகிய ஈசுவரன் நமமோடி ருக்கிறார்.

(26) அவர் வருவது நிச்சயம் ஞானிகளை வருத்தியமை க்கும் சப்தங்கள ஆயிரககணக்காக விருந்தபோதிலும, செவிடர்களுக்குக் கேட்கினறனவல்ல. அவர் நிச்சயமாக வே வருகிறார். உலகமுமம சந்தோஷிக்கின்றது. அவர் வரு கை நிச்சயமென்று உறுதி கொள்கிறவர்களே சந்தோஷ மடைகிறார்கள.

(27) இந்த நன்னம்பிக்கையானது உதயமாகுமுன் வெகுதூரத்தில் மினு மினுக்கையில் என்ன ஆச்சரியம் மநச்சஞ்சலம் அடங்குகின்றது. மௌனம் சிந்திக்கின்றது அவரைக் காணும் வரை என் ஆத்மாவானது மோகிக்கின் றது, இந்திரியங்களின் வெளி நோக்கானது குறைகின்றது, உடனே உள்முகமாக என் ஆத்மா மட்டும் சலிக்கின்றது மோஹிக்கின்றது, கடைசியாய் அவர் மௌநவாக்கை இர கஸ்யமாய்க் கேட்கின்றது. (மயர்ஸ் ஸெண்ட் பால்)

(28) என் பசுக்கள் என் குரலைக் கேட்டு என்னைப் பின் பற்றுகின்றன. (ஜான் X, 27)

நான் போகும் பக்கம், என் குழந்தைகள் எல்லோரும் என்னையறிவார்கள். பூலோகத்தினின்று, கேட்கும் இனிய கானங்களெல்லாம் என் குழந்தைகளின் கானங்கள். இராப் பகலாக அவர்கள் பாடிக்கொண்டே யிருக்கிறார்கள்.

நீ யாராயிருப்பினும், என்னைப் பார்க்கும் படியாக உன் கண்களின் மாயாமயமான திரை நீங்கும் அளவில், நீ அநுக்ரஹம் பெற்றவனேயாவாய்.

29. பக்தியும், மநஉறுதியும், சாந்தமும், நமது தினசரி நடபடிக்கையில் முக்ய அம்சங்களாக அமையுமாறு நாம் முயற்சிப்போம். (உதயநிலை நக்ஷத்ர சங்கம்.)

30. உதய ஸூர்யனே! ஹே! நித்யப்ரகாச! ஹே ஸத்யபிரகாச! அக்ஞான இருளிலும், மரண பயத்திலும் தத்தளிக்கும் ஜனங்களுக்கு உன்னொளியை யருளுவதற்கு வாரீர். (ரோமன் ப்ரீவியரி.)

31. ஈசுவரன் நாமத்தால், ஈசுவர ஆக்ஞையைக் கொண்டுவரும் அரசன் ஈசுவர அநுக்ரஹம் பெற்றவர். (லூக்கா XIX—38.)

அவரது பரிசுத்தமான திருநாமம் எக்காலத்தும் இவ்வுலகில் நிலைத்திருக்கட்டும், பூலோகமுழுமையும் அவர் மஹிமையே நிரப்பி யிருக்கட்டும். (ஸங்கீதம் LXXII-19)

ஓம் தத் ஸத்

இச் [illegible] பரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மக்ஞான விஷய [illegible] நாஸ்திகத்தைத் தொலைத்து, மத விஷயங்களில் [illegible] மத சிரத்தையை விளைத்து மனுஷ்ய வர்க்கத்திற்குபகாரப்படுபவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மதஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும் தழுவாமலுமிருக்கலாம். இம்மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களையும் பாரபக்ஷமின்றி ஆராய்வதால், மதத்துவேஷம் நீங்கியவர்களாயும், அபிப்ராய பேதங்களில் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபையோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமல்லாமல், தத்துவங்களை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவிருப்பதாலேயே, இச்சங்கத்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்பினாலும் ஆழ்ந்த சிந்தனையாலும் சுத்த சர்யையாலும், உயர் நோக்கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தையடையக்கூடும். தீவிரமான உழைப்பின் பயனுள்ள அநுபவத்தால்தான் ஒருவனுக்கு உண்மை கைகூடும். அதிகாரத்தால் கட்டுப்படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது. அறிவில்லால் நம்பலகாது. எல்லோரிடத்தும் பொறுமையும், பொறுமையற்றவர்களிடமுங்கூட நமது கடமையாகக்கொண்டு, அன்பையே காட்டுவதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல் அவர்களுக்கு போதிப்பதுமே சிலாக்யமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும் பிரஹ்மக்ஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனுண்மையை அசட்டை செய்யாது படிக்கவேண்டுமென்றும் ஒருவனையும் ஓர் மதத்தினின்று இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகாயுள்ள உபதேசங்களை யநுசரிக்கச் செய்தலே மேன்மையென்றும் இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர் லக்ஷ்யம். உபசாந்தமே இச்சபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும் ஆதாரமான தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத்தான் சார்ந்தது. அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன் தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்சய விபரீதங்கள் அனைத்தையும் விலக்கி எதத்தையே உயர்ந்த நீதி நெறியிடை [illegible] விசேஷமுறையான துநடை பெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப்படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது அடிக்கடி நேரும் ஓர் சம்பவமென்றும், ஸ்தூலதேஹம் நீங்கியவுடன் கட்டவிழ்ந்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடுபட்டு அதிமேன்மையான ஸூக்ஷ்மலோகத்தில் ஜீவன் விழித்துக்கொள்ளுகிறதென்றும் விளக்கின்றது. ஞானிகள் நிதாசனமாயறிகின்றவாறே, நமது யுகத்திற்கும் பொருத்தமாக, பற்பல மதங்களின் கொள்கைகளையும் ஆசாரங்களையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களுடன் விளக்குகின்றது.

பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர், கற்று, உணர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்கவும், விரும்பும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான பிரஹ்மக்ஞானியாகவே ஒழுகுவாராக.

# தமிழ்ப் புஸ்தகங்களின் விளம்பரம்.

2. பதஞ்சலியோக சூத்திரம் 1—0—0
3. இயேசு கிறீஸ்து என்பவர் ஒழுகிக்காட்டிய ஒழுக்க முறைநூல 1—0—0
4. மாதுஸ்ரீ அநிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் 0—12—0
5. மனிதன் வமிசாவளியின் உண்மை 0—8—0
6. பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் 0—6—0
7. ஔவையோககுறள் (தமிழினின்று ஆங்கில மொழிபெயர்ப்பு) 0—4—0
8. ஸர்வசமய ஜகமதய ஸாரஸங்கிரஹம 0—4—0
9. இந்துமத தூஷணையின் பரிகாரம் 0—4—0
10. மௌநபாகம் 0—2—0
11. ஸநமார்க்க தீபம் 0—2—0
12. மாதுஸ்ரீ அநிபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) 0—1—0
13. மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் 0—1—0
14. ஏணைவசூரின இரஹஸியம் படத்துடன் 0—1—0
15. காயத்ரீ 0—1—0
16. காயத்ரீராமாயணம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) 0—1—0
17. மாதுஸ்ரீ ஹெலிநாமபான் அம்மையார் சரித்திரம் 0—0—6.
18. ஹிந்து என்பவன் எவன்? 0—0—6
19. லோககுருவின் அவதாரங்கள் 0—0—6
20. பகவான கௌதம புத்தரின் சரித்திரம் 0—0—6
21. வெள்ளியம்பலம் என்ற ஞாநிகளின் சபை 0—1—0
22. மோனம் என்பது ஞானவரம்பு 0—0—6
23. உதாஸீந ஸாது ஸ்தோத்திரம (ஸம்ஸ்கிருத மூலமும தமிழ் மொழிபெயர்ப்பும், 0—6—0
24. மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் 0—0—6
25. தேவாலயம 0—0—6
26. பிரஹ்மஞானமும் பிரஹ்மஞானசபையும் 0—0—6
27. ஸன்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் 0—1—0
28. மநீஷா பஞ்சகம் 0—1—0
29. குருசிஷ்ய ஸம்பந்தம் 0—1—0

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞானஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "[illegible] இங்லாபிகல பப்ளிஷிங் ஹவுஸ், அடையாறு சென்னை [illegible] விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.